# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௩௬ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௨, புரட்டாசி அக்டோபர், 1961 | பரல் ௨ |
|---|---|---|


# சங்க நூற்களின் தனிச்சிறப்பு

கன்னித் தமிழ்நாட்டின் தொன்மைக் கருவூலங்களாக நின்று நிலவுவன சங்கமருவிய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமும், பாட்டுந் தொகையும் கணக்குமென வழங்கிவரும் முத்தனைய முத்திற நூல்களுமேயாம். தொல்காப்பியம் ஈடும் எடுப்புமில்லாப் பீடுசேர் செந்தமிழிலக்கணமாகும். இஃது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை யுடையது. ஒவ்வொன்றும் ஒன்பதொன்பது இயல்களை யுடையன. பொருளதிகாரமானது உலகிடை வேறெம் மொழியிலுந் தோன்றாத தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த தன்மையுடையதாகும். அதன்கண் காணப்படும் அகத்திணை, புறத்திணை, களவியல், கற்பியல், பொருளியல் என்னும் ஐந்தும் தமிழகப் பண்பாடு, நாகரிகம், வாழ்க்கை, வழிபாடு, ஆட்சி முறை, நிலவளம், நீர்வளம், மலைவளம், காவல் (வீரம்), காதல், கற்பு, கடமை, அன்பு, அருள், ஒற்றுமை, ஊராண்மை, பேராண்மை, பிறவாப்பெரு வாழ்வு முதலிய மாந்தர் ஒழுகலாறுகளை வரைசெய்துணர்த்தும் தழிகப் பண்டை மெய்வரலாற்று நூலாகும். இவை யாண்டும் எல்லார்க்கும் வழிகாட்டுவனவாகும்.

இத்தொல்காப்பிய முழுமுதல் நூல் ௧௬௧௦ நூற்பாக்களை யுடையது. இவற்றுள் எழுத்ததிகார நூற்பா ௪௮௩; சொல்லதிகார நூற்பா ௪௬௩; பொருளதிகார நூற்பா ௬௬௪. இச்சீரிய நூலை ஆக்கித் தந்தவர் தொல்காப்பிய முனிவரனாராவர். இவர், "செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு, முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப், புலம் தொகுத்த" பொருள்சேர் புகழாள

ராவர். இந்நூல் முதற்சங்கத்தின் இறுதியிலும் இடைச் சங்கத் தொடக்கத்திலும் தோன்றியதென்ப. இதன் கால வரையறையைச் சிலர் மிகவும் பிற்போக்காகக் கூறினும் உண்மை கண்டு கூறிய சிலர் கொள்கையே மெய்ம்மையென வலியுறுத்தப்படுகின்றது. அக்காலம் ஏறத்தாழ ஐயாயிரத்துக்கு முன்னென்ப. இதனை அரப்பா, மகஞ்சதரோ முதலிய இடங்களின் புதைபொருளாய்வும் வலியுறுத்துகின்றது. இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்வனவே சங்கமருவிய இலக்கியங்கள். பாட்டுந்தொகையுமாகிய நூல்கள் ஏறத்தாழப் புலத்துறை முற்றிய செந்நாப் புலவர்கள் (௪௭௩) நானூற்று எழுபத்து மூவரால் பாடப்பட்டனவாகும். பாடல் தொகை ௨௨௭௯ ஆகும். இவற்றிற்குமேல் ௧௦௨ பாடல்களுக்கு ஆசிரியர் பெயர்கள் காணப்பட வில்லை. அவையுஞ் சேர மொத்தப் பாட்டுக்கள் ௨௩௮௧ ஆகும். இவற்றுள் பத்துப்பாட்டின் அடிகள் ௩௫௫௨ ஆகும். இவற்றை நான்கால் வகுக்க ௮௮௮ பாடல்களாகும். இது போல் கலித்தொகையடிகள் ௪௩௦௩ ஆகும். இவற்றைப் பாட்டாகக்கொள்ளுங்கால் ௧௦௭௬ ஆகும். பதிற்றுப் பத்தின் அடிகள் ௧௭௦௬ ஆகும். இவையும் ௪௨௭ பாட்டாகும். பரிபாடல் அடிகள் ௧௭௯௮ ஆகும். இவையும் ௪௫௦ பாடல்களாகும். பரிபாடலில் பின்னிணைப்பாகத் திருமாலுக்கு ஒன்றும், வையைக்கு ஒன்றுமாக இரண்டு பாடல்களுள்ளன. அவற்றின் அடிகள் ௧௭௮ ஆகும். பாடல்களாக இவை ௪௫ ஆகும். இவையல்லாமல், மதுரைக்குள்ள பாட்டுக்கள் ௬ உள்ளன. இவையனைத்தையும் கூட்டச் சங்கப்பாட்டுக்கள் ௫௦௯௧ ஆகும். பதினெண் கீழ்க்கணக்கின் பாடல்கள் ௩௨௪௩ ஆகும். ஆக மொத்தம் பாடல்கள் ௮௩௩௪ ஆகும்.

பத்துப்பாட்டின் வைப்பு முறை: ௧. திருமுருகாற்றுப்படை ௨. பொருநராற்றுப்படை ௩. சிறுபாணாற்றுப்படை ௪. பெரும்பாணாற்றுப்படை ௫. முல்லைப்பாட்டு ௬. மதுரைக் காஞ்சி ௭. நெடுநல்வாடை ௮. குறிஞ்சிப்பாட்டு ௯. பட்டினப்பாலை ௧௦. மலைபடுகடாம் என்ப. இவற்றின் ஆசிரியர் எண்மராவர். அவர், ௧. மதுரைக் சணக்காயனார் மகனார் நக்கீரனார் ௨. முடத்தாமக் கண்ணியார் ௩. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ௪. கடியலூர் உருத்திரங்கண்ணனார், ௫. காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ௬. மாங்குடி மருதனார் ௭. கபிலர் ௮. இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் ஆவர். இவருள் நக்கீரனார் திருமுருகாற்றுப்படையுடன் நெடுநல்வாடையினையும் பாடினர். உருததிரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்

படையுடன் பட்டினப் பாலையையும் பாடினர். இந்நூற்களின் வைப்பு முறையினை யுணர்த்தும் பழம்பாட்டு வருமாறு :

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

க. திருமுருகாற்றுப்படை: "பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" (தொல். பொருள் கூக) என்னும் ஒழுகலாற்றிலக்கணம் ஆற்றுப்படை கட்கு முறையாகும். உலகிடைக் காணப்படும் வித்தும் விளைவு மாகிய முதற்பொருள்களும் ஆக்கப்பாடுகளும் விழுமிய முழு முதல்வனின் உடைமையேயாம். அவற்றைக் கைக்கொண்டு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் நல்லாரனைவரும் அம்முதல் வனின் அடிமையேயாம். சுருங்கக்கூறின் காணப்படும் பொரு ளனைத்தும் அம் முதல்வனது உடைமை. முதல்வன் உடைமை அடிமை முப்பொருளென்ப. கருதப்படும் உயிரனைத்தும் அவன் அடிமை.

எல்லாப் பிறப்பினும் சிறந்த பிறப்பு மக்கட்பிறப்பேயாம். அதற்குச் சிறந்த காரணம் கடவுள் நினைப்பும், அந்நினைப்புக்குத் துணையாம் திருவுருவ வழிபாடும், வழிபாட்டிற்குத் துணையாம் திருமுறைகளும், இவற்றால் செல்வமும் சிறப்பும் எய்திச் சீருடன் வாழும் வாழ்க்கையும், ஈத்துவக்கும் இன்பமும், உழைப்பும், ஊதியமும், ஊராண்மையும், ஒற்றுமையும், பேராண்மையும், பிறப்பறமுயலும் சிறப்பும் பிறவும் கடைப்பிடித்தொழுகலாம்.

ஒருவர் தாம் பெற்ற இன்பம் பிறரும் பெற்று வாழுதல் வேண்டுமென்னும் நன்னெஞ்சினராய் அவர்பால் வலியச்சென்று ஆக்கம் பெற்றுய்யுமாறு ஊக்கி, வழி வகைகளை வகுத்துக்கூறி வரையாது வழங்கும் வள்ளல்பால் ஆற்றுப்படுத்தல் அவர்தம் அருங்கடனாகும். இதுவே வாழ்க்கை நன்னெறியுமாகும்.

ஆற்றுப்படைக்குப் பெயர் ஆற்றுப்படுத்தப்படுவோன் பெய ரான் வழங்கும். அவ்வுண்மை இப்பத்துப் பாட்டில் 'பொரு நராற்றுப்படை' முதலியவற்றானுணரலாம். ஆனால் திருமுரு காற்றுப்படை அங்ஙனம் வழங்கவில்லை. பாட்டுடைத் தலைவன் திருமுருகன் திருப்பெயரானே வழங்கி வருகின்றது.

திருமுருகாற்றுப்படை ஆறு திருப்படை வீடுகளைக் கொண்டு திகழ்கின்றது. அவற்றுள் அஞ்சாவதாகக் காணப் படுவது குன்று தோறாடல். அவையும் குறிஞ்சித்திணைக்கண்

ணமையும். ஏனைய படை வீடுகள் அஞ்சும் ஒருபுடையொப்பாக ஐந்திணைகளையுங் குறிக்கும் குறிப்பாகும். அவற்றுள் க. திருப்பரங்குன்றம் குறிஞ்சி, உ. திருச்சீரலைவாய்நெய்தல், ௩. திருவாவினன் குடி முல்லை, ச. திருவேரகம் மருதம், ரு. பழமுதிர் சோலைமேலோதிய நானிலமும் உறுப்பாகக் கொண்ட உறுப்பியாகக் கொள்ளலாம். ஏனைப் பாலைத்திணை முல்லையுங் குறிஞ்சியுந் திரிந்த நிலமாதலின் அது செல்லும் வழிகளான் அமைவதாகும்.

திருமுருகாற்றுப் படையின் அடிகள் ௩கஎ. இதன்பெறு பேறுசெல்வமும் சிறப்பும். செல்வம் மாயாகாரிய உடலோடுகூடிய வாழ்வு. சிறப்பு அருள்மெய்யோடு கூடிய வாழ்வு. இவ் வுண்மை வருமாறு :

> " மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
> யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
> அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
> றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
> தொருநீ யாகித் தோன்ற விழுமிய
> பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன் "
>
> —திருமுருகாற்றுப்படை—உகூ0 - ரு.

இக்கடவுள் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு நல் வாழ்க்கை வாழ்வதே செல்வத் தமிழகத்தார் வாழ்க்கை. இவற்றைச் செம்மையுற உள்ளவாறு விளக்குவதே சங்கமருவிய நூல்கள். ஒவ்வொன்றையுந் தனித் தனி விளக்குவதெனின் இக் கட்டுரை மிக விரியும். ஆதலின் சிற் சில கூறிச்செல்வாம். உ. பொருநராற்றுப்படையின் அடிகள் உசஅ. கரிகாற் பெருவளத்தான்பால் ஒரு பொருநனை ஆற்றுப்படுத்தியது. பாடிய புலவர் முடத்தாமக் கண்ணியார். பொருநராவார் இசைத் திறம் வல்லார்; வாழ்க்கையின் உண்மை நுண்மைகளைக் கூத்தின் வாயிலாக அனைவர்கட்கும் எண்மையுறக்காட்டு மியல்பினர். இவைகளை நூலின் வாயிலாக வுணர்வோர் நுண்ணுணர்வினரே யாவர். அவர்தம் போதனையால் சிலரும் பலரும் உணர்தல் கூடும். ஆனால் கற்றார் கல்லார் இளையர் முதியர் ஆகிய அனைவர்களும் ஒருங்குணர்ந்து மனத்தின்கண் பதித்து ஒழுகுவதற்குப் பெருந்துணையாவது கூத்தொன்றுமேயாம். இக்கூத்தினுக்கு இயற்றமிழ் உயிராகவும், இசைத் தமிழ் உளமாகவும் திகழ்வன. எனவே கூத்து உடலாகும். இப் புகழ்சால் பொருநர் பொருவிலிசையில் 'துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வவ்வும்' கொடிய பாலைநில மாக்களும் தங்கள் கொலைப்படையினை அகல எறிந்து நிலைபேரா தின்று தம் வயம் இழப்பரெனின், வேறென் கூறுவது !

" ஆறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை." —பொருந. உக, உஉ.

ங. சிறுபாணாற்றுப்படை: இஃது உசுகூ அடிகளைக் கொண்டது. ஓய்மானாட்டு நல்லியக் கோடன்பால் ஒரு பாணனை மற்றொரு பரிசில் பெற்ற பாணன் பரிசில் பெறும்பொருட்டு ஆற்றுப்படுத்தியது. இதனைப்பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். பாணர் கைக்கொள்ளும் யாழ் வேறு பாட்டால் சிறுபாண் பெரும்பாண் என இருதிறப்படுவர். அவருள் சிறுபாண் நிலையினர் இப்பாணர். இதனை யடுத்துவருவது பெரும்பாண். கற்பின் அடையாளமாகச் சூடும்மாலை முல்லை யென்ப. அதுவருமாறு :

" முல்லை சான்ற கற்பின் மெல்லியன்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்."

—சிறுபாண்-ங0, ஙக.

இதன்கண் க. பேகன், உ. பாரி, ங. காரி, ச. ஆய், ரு. அதிகமான், சு. நள்ளி, எ. ஓரி, என்னும் வள்ளல்கள் எழுவரும் செய்துள்ள செயற்கருஞ் செயலும் கொடைத்திறனும் பிறவும் அடிகள் அச முதல் ககங வரை விளக்கப்பட்டுள்ளன. இவைகள் வாழ்க்கைக்கு நல் வழிகாட்டும் மெய்வரலாறுகளாகும். மேலும் நானிலம் வாழ்வார் நன்றுபுரி செயல்கள் நவிலப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்று வருமாறு :

" மருதஞ் சான்ற மருதத் தண்பணை
யந்தண ரருகா வருங்கடி வியனக
ரந்தண் கிடங்கினவ ணொழ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி
னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
விருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
வவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்."

—சிறுபாண் கஅசு-ககரு.

ச. பெரும்பாணாற்றுப்படை: இது ரு00 அடிகளையுடையது. தொண்டைமான் இளந்திரையன்பால் பெரும்பாணன் ஒருவனை ஆற்றுப்படுத்தியது. பாடினவர் கடியலூர் உருத்திரங் கண்ணனாராவர். இதன்கண் வாழ்க்கை வளமும் சிறப்பும் பிறவும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. அடிகள் ச0 முதல் ஙக0 வரைப் பல்வேறினத்தவரின் வாழ்க்கை முறையும், விருந்

தோம்பும் பெருந்தன்மையும் திருந்தக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக ஒன்று வருமாறு:

“செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்று
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்படு வத்தஞ்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துறுப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடு விதிர்த்த
தகைமாண் காடியின் வகைப்படப் பெறுகுவிர்.”
—பெரும்பாண் உ௯எ-௩௧0.

௫. முல்லைப்பாட்டு: இது ௧0௩ அடிகளையுடையது. இதனைப் பாடியவர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார். ‘முல்லை யென்பது இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்துவரும் துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை’ யென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இதன்கண் அகவாழ்க்கைச் சிறப்பும், போர்முறை கூறும் புறவாழ்க்கைச் செல்வமும் நன்கு காணப்படும். தொடங்கும் காரியம் முடங்கலும் மடங்கலுமின்றிச் செவ்வகையாக நிறைவுறுதற்குக் கடவுட்டுணையைக் கடைப்பிடித் தொழுகுதல் மாந்தரனைவர்கட்கும் கடனாகும். அதன் பொருட்டு முதிய பெண்டிர் முல்லைமலரும் நெல்லும் தூவித் தெய்வத்தைப் பரவி நற்சொல் வேண்டிநிற்பர். இதற்கு விரிச்சி என்று பெயர். ஆற்றிடைச் செல்வார் தமக்குள் கூறிக்கொள்ளும் சொற்குறிப்பினால் பிழைப்பும் வாய்ப்பும் இழைத்துணர்ந்து கோடல் விரிச்சியென்ப. இம்முறை பல்லி சொற்கோடலும், திருமுறைகளிற் கயிறு சார்த்திப் பார்த்தலும் போன்றதாகும். இதன்கண் விரிச்சி கேட்டல் வருமாறு:

“பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை

யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டனம்...” —முல்லை க-கஎ.

சு. மதுரைக்காஞ்சி: இது தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனுக்குப் பல்வேறு நிலையா மையை அறிவுறுத்தும் பொருட்டுப் பாடப்பட்டது. இது எசஅ அடிகளையுமுடையது. இப்பத்துப் பாட்டினுள் இதுவே கூடுதலான அடிகளையுடையது. உலக வாழ்க்கையின் உண்மை விழுப்பயன் மெய்யுணர்வு கைவரப் பெறுதல். மெய்யுணர்வுக்கு வாயில் உல குடற்பொருள்கள் நிலையா வென்னும் வாய்மையினைத் தெளிதல். இத்தெளிவிற்கு வித்து, திருவருள் கைவரப் பெறுதல். திரு வருள் கைவருதற்கு முதல் சிவவழிபாடாகிய நற்றவம். காஞ்சி யென்பது நிலையாமைக் குறிப்புணர்த்துவது. இவ்வுண்மை வருந் தொல்காப்பிய நூற்பாக்களான் உணரலாம். அது வருமாறு:

“காஞ்சி தானே பெருந்திணைப் புறனே”

“பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.”
—தொல், பொருள்-எஎ, எஅ.

நிலையாமைக் குறிப்பு வருமாறு:

“அன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன் று கிளக்குவ லடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை.”
—மதுரைக்காஞ்சி உ0சு-க.

மாயைப்படை வாராமல் திருவருட்டுணையால் வெல்லுவதே சீரிய வெற்றியாகும். இவ்வுண்மை வரும் திருப்பாட்டானுணர்க:

“ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறையின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.”
—அ. திருப்படையெழுச்சி-க.

இதன்கண் விழுமிய முழு முதல்வன் சிவபெருமானே என்னும் மெய்ம்மையினை யுணர்த்தும் அடிகள் வருமாறு:

"நீரு நிலனும் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமா
ரந்தி விழவிற் றூரியங் கறங்க"

—மதுரைக் காஞ்சி, ௪௫௫-௪௬0.

எ. நெடுநல்வாடை: பாண்டியன் நெடுஞ்செழியன் பகைமேற் சென்றனன். அவனைப் பிரிந்த அவன் மனைவியாகிய தலைவிக்கு வருத்தம் ஏற்பட்டது. அவ்வருத்தந் தீர அவன் பகையை வென்று விரைவில் வருவானாக வென்று பெருமுது பெண்டிர் பெரும் பெயர்க் கொற்றவையைப் பரவினர். அவர் கூறியதாக இது பாடப்பட்டது. இதனைப் பாடியவர் நக்கீரனார். இது ௧அஅ அடிகளையுடையது.

வினைமேற் சென்ற ஆடவர் விரைவின் வினைமுடித்து வெற்றியோடு மீள வேண்டுமென வீட்டிலுள்ளார் தெய்வத்தைப் பரவும் சிறப்பும், இதனால் நன்கு பெறப்படும். மேலும் ஆடவர் அருஞ் செயல்களனைத்திற்கும் மகளிரின் கடவுள் வழிபாடு பெருந்துணையாம் என்பதும் புலனும். கூதிர்க் காலப்பருவத்து மக்கள் விலங்கு பறவைகள் முதலியன குளிரால் வருந்தும் நிலை இதிற் காணலாம். பள்ளிக் கட்டிலின் வனப்பும் பாங்குற விளக்கப்பட்டுள்ளது. தலைவியின் கற்பும் பிரிவுத் துன்பமிகுதியும் உணர்த்தப்பட்டுள்ளன. பாசறைக்கண் வேந்தன் படைமள்ளரைக் காண்டலும், வருந்தலும், கூறலும், செய்தலும், செய்ந்நன்றி யறிதலும் செம்மையுறக் காணலாம். பூ மலர்வதனால் பொழுதறிதலும், மகளிர் மாலைக்காலத்தைக் கொண்டாடுதல் வீட்டுமனையினை வகுத்து வீடாக்கு முறைமை பலவுங் காணலாம்.

செவிலியர் கொற்றவையைப் பரவுதல் வருமாறு:

"புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர விறல் தந்
தின்னே முடிகதில் லம்ம..." —நெடுநல்வாடை, ௧௬௬-அ.

அ. குறிஞ்சிப்பாட்டு: இஃது ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குப் பாடியது. இதனைப் பாடியவர் கபிலர். இது உ௬௧ அடிகளையுடையது. பண்டைப் பெரும் புலவர்கள் தமிழின் இயற்கை இன்பச் சிறப்பினைத் தாம் நுகர்ந்தது மட்டுமன்றி அயன்மொழியாகிய ஆரிய மொழியாரையும் நுகர்ந்தாச் செந்

தமிழின்கண் ஈடுபடுத்தி இன்புறச் செய்தனர் என்பது இதனுல் நன்கு புலனுகும். ஓர் ஆரிய மன்னனைத் தமிழினருமை அறியுமாறு அவனுக்கு எளிதினி லிக்குறிஞ்சிப்பாட்டு வாயிலாகக் கபிலர் பெருமான் கற்பித்தனர். இக்கபிலர் குறிஞ்சித் திணையைப் பாடுவதில் மிக்க திறலர். இதன்கண் குறிஞ்சிவளம் திணைப் பொருள் முதலிய பலவும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான பூக்களின் பெயர்களும் இயல்பும் நன்குணரலாம். தோழி அறத்தொடு நிற்றல் நன்கு நவிலப் பட்டுள்ளது. மணமகளை ஈன்றோர் கைப்பிடித்துக் கொடுக்க ஆன்றோர் சான்றுக மணமகன் ஏற்றுக் கொள்ளும் மாண்புடைச் செய்கை வலியுறுத்தப் படுகின்றது. அது வருமாறு:

"நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்ஞட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறி"　　—குறிஞ்சிப் பாட்டு, உருக-௪

கூ. பட்டினப்பாலை: இது சோழன் கரி காற் பெருவளத்தான் மீது பாடப்பட்டது. இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனுர். இதனடிகள் ௩௦க. கரிகாற் பெருவளத்தான் இப்பட்டினப்பாலையைக் கேட்டு மகிழ்ந்து பதினுறு நூறுயிரம் பொன் புலவர் கோமானுக்கு வழங்கினன். இதன்கண் நெய்தல் வளம், பட்டினச் சிறப்பு, வாணிக அறமுறை, செங்கோன்முறை, வெளிநாட்டாருடன் கொண்ட வாணிக வளம், தலைவர் தலைவியர் பிரியாப் பெற்றி முதலியன காணலாம். பிரியாமை வருமாறு:

"வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையு
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே...　　—பட்டினப்பாலை, உக௪-உஉ0.

வணிக அறமுறை வருமாறு:

"கொலைகலித்துப் பகைபேணுது
வலைஞர் முன்றின் மீன் பிறழவும்
விலைஞர் குரம்பை மாவீண்டவும்
கொலைகடிந்துங் களவு நீக்கியு
மமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
நல்லானெடு பகடோம்பியு
நான்மறையோர் புகழ்பரப்பியு

பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉம்
குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசுந்
தொல் கொண்டித் துவன்றிருக்கையும்''
—பட்டினப்பாலை. கூகூ-உகஉ

௬0. மலைபடுகடாம்: இது செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன்மேல் பாடப்பட்டது. இதனைப் பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசினார். இது ருஅந அடிகளைக் கொண்டது. இப்பாட்டுக் கூத்தரை ஆற்றுப்படுத்தியது. வழங்கும் வள்ளல்பால் பரிசிலர் போவதற்கொப்புப் பழ நிறைந்த பெருமரந் தேடிப் பறவைக் கூட்டம் இனத்தொடு செல்வதாகும். அக்குறிப்பு: 'கனிபொழி கானங் கிளையோ டுணீஇய, துனைபறை நிவக்கும் புள்ளின மான' என்பதன்கண் காணலாம். வள்ளற் றன்மையைக் குறிப்பது வருமாறு:

"     ...     ...     ...     புகழுநர்க்
கரசுமுழுது கொடுப்பினு மமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னுண்மகி ழிருக்கையும்"
—மலைபடுகடாம் எந-௬

புரவலர்தாமும் புலவராயிருந்து பொருள் விளக்கம் புரிதல் வருமாறு:

"நல்லோர் குழீஇய நாநவில் வையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதி னியக்குமன் சுற்றத் தொழுக்கமும்."     —எஎ-அ0.

மூவர் தேவர் மக்கள் சிற்றுயிர் முதலிய யாவரையும் அவரவர்க்கு நேர்ந்த துன்பத்தினை நீக்கி வேண்டும் இன்பத்தினை ஆக்கிக் காத்தருளும் திறலுடைய விழுமிய முழுமுதற் றெய்வம் செந்தமிழோர் திருவருளால் கண்டு தொன்று தொட்டு இன்றுகாறும் அவர்களால் வழிபடப் பட்டுவரும் சிவபெருமானே என்பது வருமாறு:

"நீரகம் பனிக்கு மஞ்சுவரு கடுந்திறம்
பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்." —அக-௩.

நிலவளத்தால் மரங்கள் காலமன்றியும் பயன் கொடுக்கும் குறிப்பு வருமாறு :

"கால மன்றியு மரம்பயன் கொடுத்தலிற்
காலி னுதிர்ந்தன கருங்கனி நாவல்." —க௩-சடு

நன்னன்கூத்த ரென்று நவில்வார்க் குண்டாம் உரிமைச் சிறப்பு வருமாறு:

"நோனுச் செருவின் வலம்படு நோன்றாள்
மான விறல்வேள்-வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட்புலம் பகல வினிய கூறிப்
பரூஉக் குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெருகுவிர்." —கசு௩-௯.

வழங்கும் வள்ளலின் உளமும் திறனும் வருமாறு :

"புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினும் தான்பெரி
துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி
யிழைமருங் கறியா நுழைநூற் கலிங்க
மெள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவ றந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லி னரிசிமுட் டாது
தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர் ... " —௫௫எ-௫௬௬ :

இதுகாறும் பத்துப்பாட்டின் நயங்களை ஒரு சிறிது கூறினும். இவைகள் அப்பாட்டுக்களை முழுவதுங்கற்கவேண்டுமென்னும் வேட்கையினை எழுப்பும் குறிப்புக்களாகும். இனித் தொகை நூலினைப் பற்றிச் சிறிது கூறுதும்.

தொகை நூல்களுள் 'ஐங்குறுநூறும்', 'கலித்தொகையும்' ஐந்திணைகளையும் தனித்தனிக் கிளந்தெடுத்து விளக்குவன. ஏனை, நற்றிணை, குறுந்தொகை, அகம் (நெடுந்தொகை) என்னும் மூன்றும் ஐந்திணைகளையும் நானூறு நானூறு பாக்களால் விரவிக் கூறுகின்றன. இம் மூன்றனுள் குறைந்த அடிகளையுடையது குறுந்தொகை. கூடுதல் அடிகளையுடையது நெடுந்தொகை

யாகிய அகநானூறு. எனவே இடை நிகர்த்தனவாகிய அடிகளை யுடைய தொகைநூலுக்கு நற்றிணை எனப் பெயர் கொடுத்தனர். 'மாயோன் மேய காடுறை யுலக'மாகிய முல்லைத்திணையே நற்றிணை என்ப. இக் குறிப்பு நற்றிணைக்கு அமைந்துள்ள 'மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாட்டான் உணரலாம்.

நற்றிணைக்கண் எது செல்வமென வினவுவார்க்கு அழிந்து படும் பொருளன்று செல்வம்; அழியாது நின்று சிறப்பாகிய அம்மைக்குத் துணையாக நிற்கும் தண்ணளியாகிய அந்தண்மையே செல்வமென்று கூறப்பட்டுள்ளது. அது வருமாறு:

"அரிகான் மாறிய வங்க ணகல்வயன்
மறுகா லுழுத வீரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாண ரூர
நெடிய மொழிதலுங் கடிய வூர்தலுஞ்
செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்
புன்க ணஞ்சும் பண்பின்
மென்கட் செல்வஞ் செல்வமென் பதுவே". —நற்றிணை-உகo.

இதனையடுத்துவரும் குறுந்தொகைக்கமைந்த கடவுள் வாழ்த்துச் சேயோனுக்கு அமைந்துள்ளமையும் தொகை வைப்பு முறைக்குத் துணை செய்வதாகும், "உணலினும் உண்ட தற லினிது காமம், புணர்தலின் ஊடல் இனிது" (கநஉசு) என்பதே இல்லற வாழ்க்கையின் இனிய பண்பாகும். இதன் விளக்கம் போன்று பொருந்தும் உவமையுடன் வரும் பாட்டு வருமாறு:

"கறிவள ரடுக்கத் தாங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்க னாடன்
இனிய னாகலி னினத்தி னியன்ற
இன்னா மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ளாடே."—குறுந்தொகை, உஅ.

இனி நெடுந்தொகை என்னும் அகநானூற்றுக்குக் கடவுள் வாழ்த்துச் சிவபெருமானுக்கு அமைந்துள்ளது. சிவபெருமானே வேந்தன் என்று அழைக்கப்படுவன். அவனே மருத நிலத்துக் குரிய முழு முதற்றெய்வம். களவின்வழிக் கற்பேயன்றிக் கற்பின் வழிக் கற்பும் உண்டு. தலைவன் சிறப்புக்களை எடுத்துக்கூறித் தலைவியை உடன்படுத்துவிப்பள் தோழி. அங்ஙனம் மணம் பூண்ட தலைவி தலைவன்பால் தோழியால் கூறப்பட்டனவேயன்றிக் கூறப்படாத சிறந்த பண்புகளும் உளவெனவும் அவன் வதுவை

னாளைக் காட்டிலும் மிகவும் இனியனாக ஒழுகுகின்றானெனவுங் கூறித் தோழி செய்துள்ள நன்மையை அவள்பால் விளக்கி மகிழ்வள் இதனால் இல்வாழ்க்கைச் சிறப்பும் மாண்பும் நன்கு புலனாகும். அது வருமாறு:

"முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்னது ஆகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்துணைப் பயிருங் குன்ற நாடன்
குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் எனநீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை காணில் காதலந் தோழி
கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே." —அகம். நடுஉ,

இதன்கண் 'அதியமானஞ்சி'யின் தொல்புகழ் குறிக்கப் படுதலால் தமிழக வரலாற்றுக் குறிப்புங் காணலாம்.

ஐங்குறுநூறு: அம்மையப்ப பிள்ளை என்னும் மூவரானும் செம்மையுறுவதாகும். இம் மூவரும் முறையே ஒருபுடை யொப்பாக ஆற்றல், அறிவு, அன்பு என்னும் முத்திறப் பண்பாகும் எனலாம். இம் மூன்றும் ஒருங்கமைந்ததே, சிறந்த உயிர்ப் பண்பு இவ்வருஞ்பெருஞ்சிறப்பினைக் கூறும் பாட்டு வருமாறு:

'புதல்வற் கவைஇயினன் தந்தை மென்மொழிப்
புதல்வன் றாயோ இருவருங் கவையினள்
இனிது மன்றவர் கிடக்கை
நனியிரும் காப்பினிவ் வுலகுட னுறுமே"

—ஐங்குறுநூறு - ௪0க.

கலித்தொகை: இத்தொகை நூல் ஒவ்வொரு பாட்டுந் தனித்தனி ஒவ்வொரு நூலாகும் பெருஞ் சிறப்பினையுடையது. அதனால் ஒன்றிரண்டு காட்டுக்களை ஈண்டுக் காட்டுதும்:

புணர்ந்துடன் போகிய தலைமகளைச் செவிலித்தாய் தேடி வருகின்றனள். அவள் சுரத்திடைக்கண்ட அந்தணரை வினவு

கின்றனள். அவர்கள் அக் கற்புமுறை அறமுறையே என்று அறிவுறுத்துகின்றனர். அது வருமாறு:

"இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே" —கலி. ௯.

ஒருவனும் ஒருத்தியும் திருவருளாணையால் பால்வயத்தால் காதல் கொண்டு ஒருமனப்பட்டுத் திருமணம்புரிந்து வாழ்வாங்கு வாழ்வதே இல்லற வாழ்வாகும். இருமணங் கூடுதல் இல்லியல்பா காதென்னுங் குறிப்புணர்த்தும் அடிகள் வருமாறு:

"விரிநீ ருடுக்கை யுலகம் பெறினு
மருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் கூடுத லில்லியல் பன்றே." —கலி. ௧௪.

காதலாற் கைப்பற்றிக் கடிமணம் புணர்ந்து வாழும் இருவருள் கணவனுயிர் நீங்கின் மனைவியினுயிரும் உடனீங்குமென்னும் குறிப்பு வருமடிகளானுணர்க:

"இன்னுயி ரன்னாற் கெனைத்தொன்றுந் தீதின்மை
யென்னுயிர் காட்டாதோ மற்று." —கலி. ௧௪௩.

மும்மைக்கும் வாழ்க்கைத் துணையாக வாய்ந்தாரிருவரும் செம்மைசேரோருயிராவர். அவர்கள் குடும்பம் இருதலைக்கு முரிய ஒருடல். இருவரும் ஒற்றித்து வாழ்ந்தால் குடும்பம் நன்றாகும். குடும்பமே தலைவனுக்குயிர். இவையனைத்துங் குறிப்பிற்றோன்ற வருமடிகள் இவையாகும்:

" என்னிவை, ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவனீ கூறினென்
னோருயிர் நிற்குமா றியாது" —கலி. ௮௯.

வாழ்க்கைக்கு வேண்டிய ஒன்பான் மணிகளைக் கூறும் அடிகள் வருமாறு:

"ஆற்றுத லென்பதொன் றலர்ந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"
—கலி. ௧௩௩.

பரிபாடல்: வேறெம்மொழியிலும் காணப்படாத செந்தமிழிலக்கணப் பொருளதிகாரச் சிறப்பும், இன்ப நுகர்வின் எழின் மாண்பும் விளக்கும் அடிகள் வருமாறு:

"அகற லறியா வணியிழை நல்லா
ரிகறலைக் கொண்டு துனிக்குந் தவறிலரித்
தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்" —பரிபாடல் - கூ

முருகக் கடவுளை வழிபட்டு வேண்டும் வாழ்க்கைப் பொருள்களின் சிறப்புக்களைக் கூறும் அடிகள் வருமாறு:

"அருவரைச் சேராத் தொடுநர்
கனவிற் றொட்டது கைபிழை யாகாது
நனவிற் சேஎப்பநின் னளிபுனல் வையை
வருபுன லணிகென வரங்கொள்வோருங்
கருவயி றுறுகெனக் கடம்படு வோருஞ்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரு
மையம றடுகென வருச்சிப் போரும்". —பரிபாடல் - அ.

முருகக் கடவுள்பால் திருவருள் நோக்கால் வேண்டப்படும் சீர்சால் பொருள்களைக் கூறும் அடிதள் வருமாறு:

"..................யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பா
லருளு மன்பு மறனு மூன்று
முருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே." —பரிபாடல், ரு.

பதிற்றுப்பத்து: இதன்கணுள்ள ஐந்தாம் பத்தைப் பாடிய புலவர் கோமான் பரணராவர். இவர் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடியுள்ளார். இவர் பெற்ற பரிசிலைக் கூறும் பதிகத்துக் காணும் குறிப்பு வருமாறு:

'பாடிப்பெற்ற பரிசில் உம்பர் நாட்டு வாரியையும்
தன்மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ"

இதன்கண் மகனைக் கொடுத்தான் என்னுங் குறிப்பான் உய்த்துணரக் கிடப்பது தன் மகன் பரணரால் கற்பிக்கப்பட்டுப் புலமையும், ஒழுக்கமும், ஆற்றலும், ஆண்மையும், முறைமையுங் கைக்கொண்டு வசையில் வாழ்க்கையனாய் இசைசேர் இயல்பினனாய்த் திகழ்வான் என்பதே. பண்டைய மன்னர் புலவர்பாற் கொண்டிருந்த நன்மதிப்பு இதனாலுணரலாம்.

புறநானூறு; இன்பம் பகுத்துண்டு வாழ்தலின் உண்டாம் என்னும் உண்மையினை கஅ௩ ஆம் பாட்டாலும், கல்விச் சிறப்பினை கஅ௩ ஆம் பாடலாலும், மக்கட் பேற்றினை கஅஅ ஆம்

பாட்டாலும் ஆண்மைச் சிறப்பினை ௭௭ ஆம் பாட்டாலும், பிறர்க்கென வாழும் பெற்றி வாய்ந்த பெரியோரால் உலகம் நிலைத்திருக்கின்றதென்னும் உண்மையினை ௧௮௨ ஆம் பாடலாலும் புலவர்ப் போற்றும் புண்ணியத்தினை ௫0 ஆம் பாடலாலும் கொடைச் சிறப்பினை ௨0௪ ஆம் பாடலாலும், கடமைவகையினை ௩௧௨ ஆம் பாடலாலும், தடுமாறு இவ் வுலகியலுண்மையினால் அழியா இனிமையினைக் காணவேண்டுமென்னும் மெய்ம்மையினை ௧௬௪ ஆம் பாட்லாலும், பொருளுமின்பமும் அறத்துவழிப்பட்டு வருதல் வேண்டும் என்னும் முறைமையினை ௩௧ ஆம் பாடலாலும், நட்பின் சிறப்பினையும், சான்றோர் நலத்தினையும் ௧௬௧ ஆம் பாடலாலும், இருவினை யொப்பின் இயல்பினை ௧௬௨ ஆம் பாடலாலும், தமிழகக் கடவுளாம் முக்கட் செல்வர் வழிபாட்டினை ௬ ஆம் பாடலாலும் உணரலாம். இவை போன்று உணரத் தக்கன பலவாகும்.


பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் நீதிகளை எடுத்து ஓதுவன. ஒரு சில அகப்பொருள் குறித்தும் ஓதுகின்றன. இதன்கண் திருக்குறள் ஒன்றே குறைவிலா நிறைவாய்க் கோதிலாவமுதாய்த் திகழ்ந்துகொண்டிருக்கின்றதெனின் கண்டுணரவிடுவதன்றி எங்ஙனம் எடுத்துக்கூற எம்மாலியலும்? அகப்பொருட்டுறையில் ஒன்றுகூறியமைகின்றாம்.

“அஞ்சுடர்நீள் வான்முகத் தாயிழையும் மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண்—டஞ்சி
ஒருசுடரும் இன்றி உலகுபா ழாக
இருசுடரும் போந்தனவென் றார்” —திணைமாலை நூற். ௭௧.

இத்துணைச் சிறந்த சங்க நூல்களே நம் பண்டைப் பெருமைகளை உலகுக்குணர்த்தி அவர்கள் கற்றுக் கடைப்பிடித்தற்கும் நாமும் உலகினுள் சிறப்புடையொருவராய் மதிக்கப்பட்டுக் கேடில் விழுப்பொருள் வைப்பினராய்த் திகழ்வதற்கும் உறுதுணையாவன என்னும் மெய்ம்மையோர்ந்து கற்றுச் சீரெய்துதற்கும் அழியா வழியாய் நிற்கின்றன. அவற்றைச் செவ்வியமுறையில் சிறந்த விளக்கமுடன் கழகத்து வாயிலாக முற்றும் வெளியிடும் பெற்றித் திருருருட்டுணையால் அமைந்துள்ளது.

‘சங்க நூலனைத்தின் வெளியீட்டு விழாவை’ 29-10-61இல் சென்னையில் நிகழ்த்த இருக்கின்றோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். வாழ்க சங்க நூல்! வளர்க செந்தமிழ்!

---



வரகவி, வே. செ. சொக்கலிங்கனுர்

தோற்றம்: 14-11-1896 ஒடுக்கம்: 18-8-1961

## தேனூர் வரகவி, வே. செ. சொக்கலிங்கனார்

# சிவனடி நீழல் சேர்தல்

இப்பெருந்தகையார் "சேய்த் தொண்டர் புராணம்" என்னும் அரிய பெரிய அருள்நூலைக் கற்பாருள்ளம் காதலித்தோதும் கனிவு நனிமிகப் பெருகப் பாடியுள்ளார். சேயென்பது திருமுருகன். சேய்த் தொண்டர் என்பது திருமுருகன் திருவருள் பெற்ற திருவடியார். புராணம் - பழமை. இவ்வருளாளர் 18—8—1961 வெள்ளிக்கிழமை சோதி நன்னாளில் சிவனடி நீழலெய்தினர். சிவனடியுறுதலே தவநெறித்தனிப் பேறு.

இவர்தம் திருவரலாறு வருமாறு: திரிச்சிராப் பள்ளி மாவட்டத்தில் தேனூரின்கண் தோன்றினர். பிறந்த பெருநாள் துன்முகியாண்டு கார்த்திகைத்திங்கள் முதல் நாள் சனிக்கிழமை சதயவிண்மீ (14—11—1896)னாகும். இவர்கள் துறையூரின்கண் உறைந்து வந்தனர். அகவை ஐந்து முதல் ஒன்பது வரை 'சென்ன கிருட்டிணர்' என்பவரிடம் செந்தமிழைச் சீருடன் கற்றனர். 1905 ஆம் ஆண்டில் தம் தந்தையாரின் நண்பரொருவருடன் இலங்கைக்குச் சென்றனர். 1911 ஆம் ஆண்டு தாய் நாடு திரும்பினர். தேனூரில் வாழ்ந்து வந்த ஓதுவாரொருவருடன் அவ்வூர்த் திருக்கோவிலுக்குச் சென்று திருவாசகம் ஓதி வந்தனர். இத்திருவூர் தேவார வைப்புத் திருவூர்களுளொன்று.

இவர் 1917 ஆம் ஆண்டில் மலேயாவுக்குச் சென்றார். அங்கு ஓர் ஐரோப்பியர் தோட்டத்தில் கணக்கு வேலை பார்த்து வந்தார். 1923 ஆம் ஆண்டில் இந்தியாவுக்குத்திரும்பினர். திருமணம் செய்து கொண்டார். 1924 ஆம் ஆண்டிறுதியில் திரும்பவும் மலேயாவுக்குச் சென்றனர். 1926 ஆம் ஆண்டில் அங்கு நோய் வாய்ப்பட்டார். அப்போது தேனூரிலிருந்த இவர் தம் பெரிய தகப்பனாரின் பிள்ளை சீகாழிப் பிள்ளை தேனூர்த் திருக்கோவில் உமாதேவிக்குச் சந்தனக் காப்பிட்டுத்திருநீறு குங்குமம் முதலிய திருச்சேடங்களை (பிரசாதம்) அனுப்பித் தேவியைச் சிந்தித்து அவற்றைப் பாலிலிட்டு உண்ணும்படி எழுதினர். இவரும் அவ்வாறே செய்ய மூன்று நாட்களில் நோய் நீங்கப் பெற்றனர். அத்துடன் உமையம்மையருளால் தமிழ்ப்பாடல்கள் பாடும் ஆற்றலும் கைவரப்பெற்றார்.

அப்போது தேனூர்ப் புராணம் பாடினர். அப்புராணம் இன்னும் வெளிவரவில்லை. அம்மைமீது ஒரு மாலையும் பாடினர்.

1934 ஆம் ஆண்டில் தேனூருக்குத் திரும்பிவந்தனர். உடனே துறையூருக்கு வாணிகத்தின் பொருட்டு வந்து சேர்ந்தனர். அது முதல் துறையூரின்கண்ணே வாழ்ந்து வந்தனர்.

1939 ஆம் ஆண்டில் துறையூருக்கு 3 கல் தொலைவிலுள்ள 'முருகூர்ச் சிவபிரான்மீது' 'முருகூர்ச் சிவதோத்திரத்திரட்டு' என்னும் நூலை இயற்றினர். 1941 ஆம் ஆண்டில் 'சுந்தரருலாப்' பாடினர். அவ்வாண்டிலேயே 'சேய்த் தொண்டத் தொகையைப் பாடிச் சேய்த் தொண்டர் புராணத்தை'யும் பாடத் தொடங் கினர். 1941 இல் ஓர் ஆண் மகவும் பிறந்தது. அப்பிள்ளையின் பெயர் 'நமசிவாயம்'. பின்னர் முறையே மூன்று பெண் மக்களை யும் ஈன்றனர். இவர்கள் நால்வரும் திருவருளால் செம்மையொடு வாழ்ந்து வருகின்றனர்.

இப்பெரியாரியற்றிய பிற நூல்களுள் 'திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பா, சமய குரவர் நால்வரந்தாதி, சேய்த் தொண்டர் போற்றிக் கலி வெண்பா, சேய்த்தொண்டர் திரு வந்தாதி, தேசிய சமரச கீதம்' என்பன குறிப்பிடத்தக்கன. இவர் துறையூர் வர்த்தக சங்கத்தின் தலைவராயிருந்து பணிபுரிந்தனர். "ஸ்ரீராம விலாஸ் மில்ஸ்" என்பதன் உரிமையாளராய்த் திகழ்ந்து அதனைச் செம்மையுற நடத்தி வந்தனர். இவருக்கு மிகவும் உவப்பான நூல்கள் 'திருவாசகமும், திருவிளையாடற் புராணமு' மாகும். இவர்தம் வழிபடு தெய்வம் மணிவாசகப் பெருமான்.

நம் பெரியார் தம் அகவை அறுபத்தைந்தில் சிவனடி நீழ லெய்தினர். இவர் இன்னும் பல்லாண்டு நம்மிடையே வாழ்ந்து நமக்கெலாம் நூலானும், நுண்ணுணர்வானும், திருவருள் நோக் கானும், ஓதும் அருமறையானும் பல நலங்கள் புரிதற்கு நாம் பெருந்தவம் பண்ணவில்லை. என் செய்வது! அவர்கள் பிரிவு நம்மனோர்க்கு ஈடு செயவொண்ணுப் பெரும் பிரிவே. அவர்கள் சிவனடி நீழற்பேரின்பம் பெற்று வாழுமாறும், அவ்வின்பினை யருளுமாறும் சிவபெருமான் திருவடியினை இறைஞ்சுகின்றாம்.

அவர்தம் குடும்பத்தார்க்குக் கழகத்தாரின் ஆறுதலுரை யுரியதாகுக. அவர்தம் நினைவாக அவர்களால் ஆக்கப்பட்ட நூல்களை ஓதியுணர்தலே செந்நெறிச் செல்வர்களின் சீரிய கடனாகும்.

# பொது எழுத்து வேண்டுமென்பது பொருந்தாது

இந்தியப் பேரரசில் பதினான்கு மொழிகள் ஆட்சி மொழிகளாக ஒப்புக்கொள்ளப்படிருப்பது யாவரும் உணர்ந்ததே. அப்பதினான்கு மொழியும் ஒரு நிகரன வென்பது அவ்வுடன்பாட்டால் தெரியவரும். அங்ஙனமிருக்க அவற்றுளொன்றாகிய தேவநாகர எழுத்தைப் பொது எழுத்தாக்குதல் வேண்டுமெனப் பின் கருதுவதும் முடிவுசெய்வதும் அப்பதினான்கு மொழிகளுள் ஒன்றிற்கு மட்டும் ஏற்றங்கொடுப்பதாகுமென யாவருமெண்ணுதல் இயல்பே. அங்ஙனம் எண்ணுவது எங்ஙனம் பிழையாகும்?

ஒலிவடிவாயிருந்த மொழி வரிவடிவாக வந்தபொழுதுதான் நூல்கள் பலவுண்டாகி மொழி, பண்பாடு, நாகரிகம் முதலிய பல நலம்பெற்று வளர்ந்து சிறப்புற்றது. அத்தகைய வரிவடிவ எழுத்து உயிருக்கு உடல் போன்று மொழிக்கு உடலாகத் திகழ்கின்றது. ஒவ்வொரு மொழிவல்லாரும் தத்தம் மொழிகளுக்கு அவரவராய் அமைத்துக்கொண்ட எழுத்துக்களை யகற்றி அந்த இடத்தில் தேவநாகர எழுத்தை அமைக்கச் செய்தால் தங்கள் மொழிகளும் எழுத்து அமையப் பெறாத நாகரிக வளர்ச்சியில்லாத மாந்தர் மொழிபோல் கருதப்படுமென்று கருதுவதில் தவறு ஏதும் ஏற்படுதற்கு வழியுண்டா? ஒற்றுமைக்கு வழியென்னும் புனைவால் எழுத்தை அழித்துவிடும் நிலை, இதைவிட மேலாக ஒரு மொழியாகவே இருந்தால் நாட்டின் ஒற்றுமை நனி மிக வுண்டாகுமென நவின்று ஒரு மொழியாக்கி ஏனைய மொழிகளை அழித்துவிட வேண்டுமென்னும் பெரு நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுமென்று பேரச்சங் கொள்ளுதலும் தவறென்று சொல்லுதல் ஒண்ணாது. தேவநாகரப் பொது எழுத்துக் கொள்கையைத் தமிழக மாநில நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பலமுறை கண்டித்துள்ளார்கள். அவர்களை நனிமிகப் பாராட்டுகின்றோம். அதே கண்டனத்தைத் 'தேசிய ஒற்றுமை மாநாட்டி' லும் புதுடில்லியின்கண் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும் 'தேவநாகரித் திணிப்பால் நாட்டு ஒற்றுமை சீர்குலையும்' என்னும் உண்மையினை அம் மாநாட்டில் பல அமைச்சர்கள் கூறியுள்ளார்கள்.

எது எங்ஙனமாயினும் தேவநாகரப் பொது எழுத்துக் கொள்கையினைத் தமிழ்நாடு ஒருகாலத்தும் ஏற்றுக்கொள்ள மாட்டாது. ஏனைய மொழிகளுக்குள்ள எழுத்துக்களைப் போல்

தமிழ்நாட்டவர்கள் தங்கள் தமிழ்மொழி எழுத்தைக் கருதவில்லை. அவ்வெழுத்துருவத்தை மந்திரவடிவமாகக் கருதுகின்றனர். ஒருவருடம்பை ஏனையார் உடம்புபோல் மாற்றுதல் வேண்டு மென்று பிறர் விரும்பினால் யார்தான் இணங்குவர்? அதுபோல் மந்திர வடிவமாம் தமிழெழுத்தை மாற்றுவதற்கு ஒருவரும் ஒரு காலத்தும் ஒப்புக்கொள்ளார் என்பது உறுதி.

மத்திய அரசினர் எந்தவகையாலும் தேவநாகர எழுத்தைப் பொதுவாக்குதல் வேண்டுமென உளங்கொண்டு தேவநாகர எழுத் துக்களைக் கொண்டே ஏனைய பதின்மூன்று மொழிகளையும் அமைத்து 'உலகியலுக்குதவும் அகராதி' என்னும் பெயருடன் ஒரு நூல் வெளிவந்திருப்பதாகத் தெரிகிறது. அதை உன்னும் மாந்தர்க்கு மறைவுத் திட்டத்தால் ஏற்படும் பேரச்சம் தோன்றுவ தியற்கையே. அத்தகைய அச்சத்திற்கு இடங்கொடாவாறு மத்திய அரசு அக் கொள்கையினைக் கைவிடுவதே பல்லாற்றானும் நல்லதாகும். அங்ஙனம் செய்யும் எனவும் நம்புகின்றோம்.

மேற்கு வங்க மேற்சபைத் தலைவர் மொழிநூற் பெரும் பேராசிரியர் சுனிதகுமார் சட்டர்ஜி அவர்கள் உண்மையோர்ந்து 'இந்தியாவுக்குப் பொது எழுத்து ஒன்று வேண்டுமென்னுங் கொள்கை ஒருகாலும் பொருந்தாது. அங்ஙனம் வேண்டுமென் றாலும் உலக முழுவதற்கும் உதவும்படி உரோமன் எழுத்தைக் கொள்ளலாம்' எனக் கூறியதாகத் தெரிகிறது. அப் பெரியார் 'பொருந்தா'தெனக் கூறியதைப் பாராட்டுகின்றோம்.

மீனக்கொடி மேன்மையொடு நிலவிய பழம்பதியாகிய மதுரைமாநகர்க்கண் 4-10-1961இல் நிகழ்ந்த 'அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுக் கூட்டத்து' இந்தியப் பேரரசின் தலைமை யமைச்சர் நேரு அவர்கள் '**தமிழெழுத்துக்குப் பதில் தேவநாகரி வரவே வராது**' என்று திட்டவட்டமாகச் செப்பி உறுதியளித் துள்ளார்கள். ஆதலால் தமிழக மாநிலத்தார் இனித் தேவநாகரி யைப் பற்றிச் சிறிதும் அஞ்சுவதற்கிடனின்று இடையிடையே பொருந்தாக் கூற்றுக்கள் சில பல வந்து உலவுவதால் மக்கள் மனத்து அந்நேரத்துக் குழப்பமுண்டாவது நீக்கமுடியாத இயல்பாகும். அக்குழப்பத்தினை யகற்ற உலகு புகழ் நேரு போன்ற பெருந்தலைவர்கள் விளக்கந் தந்து உறுதிமொழிந்து அகற்ற வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுவிடுகின்றது. இத் தகைய உறுதியுரைத்து உவப்புறுத்திய நேரு அவர்களையும் பாராட்டுகின்றோம்.

# எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி யாராய்ச்சி

## ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்

[பண்டித வித்துவான், திரு. தி. சங்குப்புலவர்]

நந்தமிழ்மொழியிலக்கணங்களில் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி யிலக்கணம் மட்டும் வியப்பும் நகைப்பும் விளைக்கு முறையில் அமைந்துள்ளது. ஒன்று முதலிய பத்தெண்களின் புணர்ச்சி யாவது சிறிது பொருத்தமாகக் கொள்ளலாம். தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற இரண்டு எண்களின் புணர்ச்சியும் புணர்ச்சி யிலக்கணத்திற்கே சிறிதும் பொருத்தமில்லாமல் அமைந்து பலவாண்டுகளாக நிற்கக் காண்கின்றோம்.

புணர்ச்சி என்பது நிலைமொழியீறும் வருமொழி முதலும் இயைவது. இயையும்போது இயல்பாய் நிற்பது இயல்பு புணர்ச்சி. மிகுதல், கெடுதல் வேறுபடுதல் ஆகிய மூன்றும் விகாரப் புணர்ச்சியின் வகையாம். மிகுதல் என்பது நிலை மொழிக்கும் வருமொழிக்கும் இடையே ஓரெழுத்து மிகுவது; ஒவ்வோரிடங்களில் ஈரெழுத்து மிகுவதும் உண்டு. கெடுதல் என்பது நிலைமொழியீற்றெழுத்தாவது வருமொழி முதலெழுத் தாவது நீங்குவது. ஈறும் முதலும் கெடுவதும் ஓரிடத்து நேரும். திரிதல் என்பது நிலைமொழியீற்றெழுத்து மற்றோ ரெழுத்தாக மாறுவது, வருமொழி முதலெழுத்து மற்றோ ரெழுத்தாக மாறுவது அல்லது இவ்விரண்டிடத்தெழுத்துக் களும் மாறுபடுவன. இவையே புணர்ச்சிக்குப் பொருத்த மானவை. ஒன்பது + பத்து = தொண்ணூறு, ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் என்று புணர்த்துக்காட்டியிருப்பது எவ்வகையிற் பொருத்தமாகும்? நிலைமொழியின் உருவந் தோன்றுகிறதா? வரு மொழியுருவந் தோன்றுகிறதா? இவ்விரண்டு மொழியுருவமுங் கெட்டு வேற்றுமொழியிரண்டு புணர்ந்து நிற்பது போலத்தோன்று வதை ஒன்பதுதான் நிலைமொழி, பத்து, நூறுதாம் வருமொழி என்று எவ்வாறு துணிந்து கூறுவது? பனை + காய் = பனங்காய். இப்புணர்ச்சி மூன்று விகாரம் பெற்றது. நிலைமொழியீற்று ஐ கெட்டது; அம்சாரியை பெற்றது; மகரமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தது. இம்மூன்று விகாரம் பெற்று நிற்பினும் நிலை மொழியுருவஞ்சிறிது குறைந்து தோன்றுகிறதேயன்றிவருமொழி வடிவு மாறாது நிற்கிறது. இவ்வாறு இருமொழி வடிவமும் தோன்றின் அதனைப் புணர்ச்சியென்று கூறுவது பொருத்த மாகும். ஒன்பதும் பத்தும் நின்று புணர்ந்தது தொண்ணூறு

அன்று; ஒன்பதும் நூறும் நின்று புணர்ந்தது தொள்ளாயிரம் அன்று; தொண்ணூறு என்பதற்குரிய நிலைமொழி வருமொழிகள், தொள்ளாயிரம் என்பதற்குரிய நிலைமொழி வருமொழிகள் எவை என்பதே ஆராயற்பாலதாம்.

தொல்காப்பியர் தொண்ணூறு என்ற எண்ணுக்குப் புணர்ச்சி விதி "ஒன்பா னொகரமிசைத் தகரமொற்றும், முந்தை யொற்றே ணகாரமிரட்டும், பஃதென் கிளவி யாய்த பகரங்கெட, நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி, யொற்றிய தகரம் நகரமாகும்" என்றார். ஒன்பது + பஃது: நிலைமொழியீறுகெட்டு 'ஒன்' என நிற்க, தகரமெய் ஒகரத்துடன் சேர்ந்து "தொன்" ஆகி, ன் ண் ஆகி, இரட்டித்துத் தொண்ண் என நிற்க, வருமொழியில் பஃ என்ற இரண்டுங்கெட, ஊ என்ற எழுத்துநின்று, ஈற்றில் நின்ற தகர மெய் றகர மெய்யாகி, ஊறு என நின்று தொண்ண் + ஊறு = தொண்ணூறு என்று புணர்ந்தது. இதுவே அதன் சுருக்கமாகும்.

தொள்ளாயிரம் என்ற எண்ணுக்கும் தொல்காப்பியர் "ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே, முந்தையொற்றே ளகார மிரட்டும், நூறென் கிளவி நகார மெய்கெட ஊ ஆ வாகு மியற்கைத் தென்ப, ஆயிடை வருத லிகார ரகாரம், ஈறுமெய் கெடுத்து மகாரமொற்றும்" என்று சூத்திரஞ் செய்தார். இது அச்சூத்தி ரத்தினும் இடர்ப்பட்ட பொருளைத் தந்து நிற்கிறது. கண்டு கொள்க.

இனி நன்னூலார் "ஒன்பானொடு பத்துநூறு மொன்றின், முன்னதி னேனைய முரணியொவ்வொடு, தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை, நிரலே ணளவாத் திரிப்பதுநெறியே" என்று ஒரு சூத்தி ரத்தில் இருபுணர்ச்சி விதியும் எடுத்துக் கூறினர். ஒன்பதுடன் பத்துப் புணரும் போது பத்து என்ற எண்ணைப் பத்தாற் பெருக்கி வருமொழியாக்க வேண்டும் என்றும், நூறு என்ற எண்ணையும் பத்தாற்பெருக்கி வருமொழியாக்க வேண்டும் என்றும் கூறிச் சுருக்கி முடித்தார். நிலைமொழித்திரிபு தொல் காப்பியர் கூறியபடியேதான். நன்னூலார்க்குப்பின் வந்த இலக் கண நூலாசிரியர்களும் இதனையே பின்பற்றின ரெனத் தெரி கிறது. தொண்டு என்பது ஒன்பது என்னும் எண்ணுப் பெயரை யுணர்த்தும். அச்சொல்லை நிலைமொழியாக நிறுத்திப் புணர்ப்பது நல்ல முறையெனப் புலவர் ஒருவர் ஆய்ந்து கூறி முடித்துக்காட்டியிருக்கிறார். அது தொண்டு + பத்து = தொண் ணூறு, தொண்டு + நூறு = தொள்ளாயிரம் என்று புணர்ந்தது எனின் நிலைமொழியீற் றெழுத்துக் கெடுவதும், ண் ள் ஆகமாறுவ தும் புணர்ச்சிக்கு ஒருவாறு பொருந்தும் எனினும் வருமொழி

யாய் நின்ற பத்து நூறாகவும், நூறு ஆயிரமாகவும் மாறியதற்குக் காரணம் யாது என வினவுவார்க்குத் தக்க விடை கூறவியலாது. ஆதலால் இதனை ஆய்ந்து நிலைமொழி வருமொழி காணப் பல ஆண்டுகள் முயன்றேன். ஒரு நாளில் எனக்குத் தோன்றியது பின் வரும் முடிவு. அவ்வாராய்ச்சி முடிவினை யடியிற் காட்டு கின்றேன்.

மக்கள் வாழ்வில் எண்ணுப் பெயர்கள் அடிக்கடி வழங்கக் கூடியவைகளாக இருப்பதால் அவற்றை ஓரசை ஈரசைக் குள்ளமைத்து வழங்குவது பல மொழிகளிலும் இருப்பதாக ஆய்ந்தறிந்தேன். தமிழ்மொழியிலும் அவ்வாறு எண்களெல் லாம் நீளமின்றி ஈரசைக்குள் ளமைந்திருக்கக் கண்டேன். இவ் வெண்களோடு பிற மொழி புணரும்போது குறுகி ஒன்று ஓர், ஓர் ஒரு எனவும், இரண்டு, இர் ஈர், இரு எனவும், மற்றையெண் களும் இவ்வாறே முதலெழுத்துமட்டும் நிற்க மற்றையெழுத்துக்க ளெல்லாம் கெட்டு நின்று புணர்ந்தன எனவும் ஆய்ந்தேன். இவற்றை மரூஉ மொழியாக நிறுத்திப் புணர்ப்பதே பொருத்த மாகும் என்பது என் முடிவு. ஓர் + ஆயிரம், ஓர் + ஆயிரம், ஒரு + கழஞ்சு, இர் + ஆயிரம், ஈர் + ஆயிரம், இரு + கழஞ்சு என்று நிலைமொழி காட்டுவதில் இடர்ப்பாடு ஒன்றுமின்று. ஒன்று என்ற எண் ஒரு ஓர், ஓர் என நின்று வருமொழியோடு புணரும் என்று புணர்ச்சி விதி கூறுவது எளிது. இவற்றை மரூஉ மொழியென்று கொண்டால் வரும் இழுக்கொன்றுமின்று. இது நிற்க.

முதலில் ஒன்பது என்ற எண்ணைக் குறித்து ஆராய்வோம். இதனை யொழிந்த ஒன்றுமுதற் பத்து வரையுள்ள எண்களைக் குறித்து ஆராயவேண்டியதின்று. அவைகள் பிரிக்கப்படா மொழிகளாக எண்களைக் காட்டி நிற்கின்றன. ஒன்பது என்ற எண்ணிற்“பது” என்ற சொல் இறுதியில் நிற்பதே ஆராய்ச்சிக் குரியதென்பதை விளக்குகிறது. ஒருபது இருபது, முப்பது என வருமவற்றைக் கண்டபோது ஒன்பது பிரிக்கப்படுஞ் சொல்லெனப் புலப்பட்டது. பத்து என்ற எண் பஃது, பது, பான் என மருவி வருமொழியீற்றி னிற்பதால் இதுவும் அவ்வாறு புணர்ந்த சொற் றொடராயிருக்கும் எனத் துணிந்தேன். நிலைமொழி எது என ஆய்ந்தேன். ஒன்பது என்ற எண் ஒன்று குறைந்த பத்து அல்லவா? ஆதலால் ஒன்றில்லாப் பத்து என முதலில் வழங்கிப் பின்னர் நாளடைவில் ஒன்றில்லாப்பது, ஒன்றில்பது, ஒன்பது என்று மரூஉவாகின்றதெனை ஒருவாறு உய்த்துணர்ந்தேன். அரு மருந்தன்னபிள்ளை என்பது ஆண்டுபல செல்லச்செல்ல அருமந்த பிள்ளையானது போல இதுவும் குன்றி நின்றதுதான் என முடிவு

செய்தேன். மற்றை எண்களைப் போலப் பிரிக்கப்படா எண்ணைத் தோன்றின் இவ்வாராய்ச்சி எழாது. மற்றைநாட்டு மொழிகளினும் ஒன்பது என்ற எண் பத்திலொன்று குறைந்தது என வழங்குவதாகவும் தோன்றுகிறது. இதனால் ஒன் + பது = ஒன்பது என்று புணர்த்துவதே எளிது. இன்றெனில் மரூஉ மொழியெனப் புணர்ச்சி விதிகாட்டாமல் தொல்காப்பியர் முதலிய ஆசிரியர் விடுத்தது போல விடுவதும் நன்று. தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற எண்ணாராய்ச்சிக்கு இது அடிப்படையாக எழுந்தது. ஆதலால் இதனை எடுத்துக் காட்டினேன். இது நிற்க.

இனிப் பத்தில் ஒன்று குறைந்த எண்ணை ஒன்றில் பத்து, ஒன்பது என வழங்கிய மக்கள் நூற்றில் ஒரு பத்துக் குறைந்த எண்ணை எவ்வாறு வழங்குவது என ஆய்ந்திருப்பரன்றோ? ஒரு பத்துக் குறைந்த நூறு என வழங்கியிருக்க வேண்டும். அது தொடர் மொழியாகவும் நீளமாகவும் இருப்பதால் அடிக்கடி வழங்கக் கூடாத நிலைமை கண்ட புலவர் ஒருவர் இது குறித்து ஆய்ந்திருக்க வேண்டும். ஆய்ந்தவர் "தொள்ளை நூறு" என்று சுருங்கிய பெயரிட்டழைத்திருப்பர் போலும். தொள்ளை-துளை-துளையுடைய நூறு என்பது ஒரு பத்துக் குறைவுடையது என்ற பொருளைக் குறிப்பால் விளக்குமெனக் கருதி மக்கள் யாவரும் அவ்வழக்கினைப் பின் பற்ற ஆட்சி மொழியாக அமைந்தது போலும். பின்னர்ப் பலவாண்டுகள் செல்லச் செல்ல, தொள்ளை நூறு, தொள் நூறு, தொண்ணூறு எனத்தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே வழங்கியதாக ஆய்தல்வேண்டும். தொள்ளை + நூறு என்பது ஈறுகெட்டு ளகரம் ணகரமாகத் திரிந்து வருமொழி நகரமும் மயக்கவிதியின்மையின் ணகரமாகத் திரிந்து தொண்ணூறு என்றாயிற்று என்பதே முடிவு.

இனி ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் என்று காட்டாமல் தொள்ளை + ஆயிரம் = தொள்ளாயிரம் என்று காட்டுவது நன்று; இடர்ப்பாடின்று. நிலை மொழியீறு கெட்டு தொள் என நின்று வருமொழி உயிராதலின் தனிக்குற்றெழுத்தின் முன் நின்ற மெய் யிரட்டித்து முடிந்தது என்று விளக்கங்கூறலாம்; தொள் + ஆயிரம் = தொளாயிரம்என்று பின் ளகரமெய் குறைந்தும் வழங்குகிறது எனவும் கூறிவிடலாம். ஒரு நூறு குறைந்த ஆயிரத்தைப் பண்டைக்கால மக்கள் முதலில் தொள்ளையாயிரம் என்று வழங்கிப் பின் அவ்வழக்குப் பல்லாண்டுகள் செல்லச் செல்லத் தொள்ளையாயிரம், தொள்ளாயிரம் தொளாயிரம் என மருவி வழங்குவதாகப் பொருளுரைப்பதற்கும் பொருந்தும். இதுவே தொள்ளாயிரம் என்ற எண்ணின் முடிவு.

இது காறும் யான் எடுத்துக் காட்டிய எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி யாராய்ச்சியால் ஒன்று முதலிய எண்கள் நிலைமொழியாக நின்று புணரும் போது தம் வடிவமாகவே நின்று புணர்ந்தன வல்ல என்பதும், ஓர் ஓர் ஒரு என்பன போலக் குறைந்து மரூஉ மொழிகளாய் நின்று புணர்ந்தன என்பதும், ஒன்பது என்ற எண் தனிமொழியன்று என்பதும், ஒன்றில்லாப் பத்து என்பது குறைந்த புணர்மொழிதான் ஒன்பது என்பதும், ஒன்பது + பத்து என்ற நிலைமொழியும் வருமொழியும் தொண்ணூறு என்று புணர்ந்து நின்றதெனக் கூறுவது புணர்ச்சிவிதிக்குச் சிறிதும் பொருந்தாது என்பதும், ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் என்பதும் அவ்வாறே பொருந்தாது என்பதும், இவ்விரண்டுக்கும் நிலைமொழி தொள்ளை என்பதே ஆகல்வேண்டும் என்பதும், அது குறைந்து தொள் என நின்று புணர்ந்து தொண்ணூறு, தொள்ளாயிரம் என நின்றன என்பதும் நன்கு விளங்கும். அறிஞர் ஆய்ந்து இன்னும் முடிவு காண்க.

---

## விழைவு

[திரு. ஆ. துரைக்கண்ணு]

இயற்கை அன்னாய் இயற்கை அன்னாய்
இருநிலம் புரக்கும் இயற்கை அன்னாய்
ஞாயு மெந்தையு மீன்றன ரன்றி
மாயிருள் ஞாலத் தாயபய னறியேன்
மங்கை தழீஇ மருவிடு மின்பமும்
அங்கவின் குழவியிற் பொங்கிடு மின்பமும்
மாணுறு பொலனணி பூணுநல் லின்பமும்
யானுற வேண்டேன் பேணரு மிவ்வள
நாட்டிற் குழைத்திடு நல்லவர் மறுகிடை
நடந்திட மிதிபடும் ஒருமல ராக
வடித்தெனைப் புழுதியிற் படைத்திடு வாயே!

# நரந்தம் (Semon grass)[1]

[திரு. பி. எல் சாமி. பி. எஸ். ஸி.]

நரந்தம் என்றொரு புல் பற்றிய செய்திகள் சங்க நூற்களில் வருகின்றன. இந்தப்புல் செடி நூலில் 'Cymbopogon Nardus' என்ற பெயருடன் விளக்கப்படுகின்றது. இப்புல்லிலிருந்து ஒரு நறுமணமான எண்ணெய் எடுக்கப்படுகின்றது. இந்தப் புல் மலையாளப்பகுதியில் மேட்டுப் பகுதிகளில் பயிராக்கப்படுகின்றது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் அமெரிக்க நாட்டிற்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு "டாலர்" வருவாயைத் தரு கின்றது. இது பல பொருளுக்கு நறுமண மூட்டப் பயனுகின்றது.

நரந்தம் புல்லின் மணத்தைப் பழந்தமிழர் மண மூட்டு வதற்குப் பயன்படுத்தியதைச் சங்க நூலிலிருந்து அறியலாம்.

" நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே"

என்று ஔவையார் அதியமானைப் பற்றிப் பாடுகிறுர். அரசர் கள் தங்கள் கைகளுக்கு நரந்த நறுமணத்தை ஊட்டும் வழக்கம் உண்டென்பது தெரிகிறது. இது தற்காலத்தில் உடலில் தீய நாற்றத்தைப் போக்க 'ஓ தெ கொலோன்' என்பதைப் பயன் படுத்துவதைப் போன்றதாகும். நரந்த நறுமணம் மகளிர் கூந்தலுக்கு ஊட்டப் பட்டதை " நரந்த நாறிருங் கூந்தல் எஞ் சாது நனிபற்றி" என்று வரும் ருச-ஆம் கலிப்பாடல் வரியிலி ருந்து உணரலாம். மலர் மாலைக்கு நரந்த நறுமணத்தை ஊட்டும் வழக்கமும் இருந்திருக்கின்றது.

" நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய
வைதமை பாணி வணர் கோட்டுச் சீறியாழ்" —புறம் ௩0௨

நரந்தம் பூவால் பலவடங்களாகத் தொகுக்கப்பட்ட மாலை என்று உரை கூறியிருக்கின்றனர். நரந்தம் புல்லிற்கு நறுமண மான பூ இல்லை. இங்கு நரந்தம் எனப்படுவது நரந்தம் புல்லில் எடுக்கப்பட்டுப் பூசப்படும் எண்ணெய் மணமே ஒழியப் பூவன்று. நரந்த நறுமணத்தையுடைய பல வடங்களாலான மாலையால் சுற்றப்பட்ட யாழ் என்று பொருள் கூறவேண்டும்.

" நரந்தங் கண்ணி இவளொடு இவனிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே"

---

1. Hippocrates (403. B. C.) said of 'Nardin' of Diseorides, called also 'gangeti's because the Ganges flows from the foot of the mountain where the plant grows—Dynock warden and Hooper's pharma cographica India.

என்ற பாடல் வரிகளுக்கு நரந்த நறுமணம் ஊட்டப் பட்ட கண்ணி என்பதே பொருளாம். மாலைக்கு நறுமண மூட்டல் வருமாறு :

" சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை"

என்று வரும் திருமுருகாற்றுப்படை வரிகளிலிருந்து உணரலாம். பிற்காலஉரையாசிரியர்கள் நரந்தம் என்று வருமிடங்களில் நரந்தம் பூநாறும் என்றும், நாரத்தை மலர் என்றும், நறை என்றும், கத்தூரி என்றும் பலபடப் பொருள் கூறிச் சென்றனர். நரந்தம் பூ என்று சங்க நூற்களில் எங்குமே பயில வில்லை.

" நளியிருஞ் சோலை நரந்தந் தாஅய்
ஒளிர்சினை வேங்கை விரிந்தவி ருதிரலொடு"

என்று வரும் பரிபாடல் ஏழாம் பாடல் வரிகளுக்குப் பரிமேலழகர் வையை நரந்தம் புற்களை வாரி வருவதாகக் கூறுகிறார்.

" காவே, சுரும்பிமிர் தாதொடு தலைத்தலை மிகூஉ
நரந்த நறுமலர் கண்களிக் கும்மே"

என்ற பதினாறும் பாடல் வரிகட்கு உரைகூறும்போது நரந்தம் பூ என்று கூறாது நரந்தம் போல மணமுள்ள பூக்களை வழங்கும் கா என்று பரிமேலழகர் பொருள் கூறிச் சென்றதைக் கவனிக்க வேண்டும். நரந்தம் புல்லுக்குத்தான் மணமொழிய அதன் வேருக்கு மணம் கிடையாது. நரந்தம் என்பதற்கு நறை என்றும் பொருள் கூறப்பட்டிருக்கின்றது. நறை ஒரு நறுமணமான கொடி; நரந்தம் ஒரு புல் என்பது சங்கநூல் கற்றாரறிவர்.

" நறையும் நரந்தமு மகிலு மாரமும்
துறை துறைதோறு பொறையுயிர்த் தொழுகி"

என்று வரும் பொருநராற்றுப்படை உருஅ-சக ஆம் வரிகள் நறை வேறு, நரந்தம் வேறு என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. நறை ஒரு நறுமணமுள்ள கொடி, நரந்தம் நறுமணமுள்ள புல், அகிலும், ஆரமும் நறுமணமுள்ள மரங்கள்.

இந்த நரந்தம் புல்லைப் பற்றிப் பதிற்றுப்பத்திலும், புறநானூற்றிலும் வரும் செய்திகள் ஆராயத்தக்கனவாகும்.

"கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவு
மாரியர் துவன்றிய பேரிசை யிமயம்" —பதிற்றுப் பத்து. உ

" நரந்தை நறும்புல் மேய்ந்து கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல

தகரத் தண்ணிழல் புனேயொடு வதியும்
வடதிசை யதுவே வான்ரே யிமயம்" —புறம் க௨௨

நரந்தம் புல் இமயமலைச் சாரலில் வளர்கின்றது. கவரிமான் அதை விரும்பி மேய்கின்றது. இமயத்தில் ஆரியர் வாழ்கின்றனர். இதில் வரும் அரிய செய்தி "பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்" என்பதாகும். இமயத்திற்குத் தொடர்புடைய தென்று பிறநாட்டாரால் போற்றப்பட்ட அருவி கங்கையாருகும். 'பரந்திலங் கருவி' எனப்படுவது கங்கையாருகவே இருக்கலாம். ஆதலால் பழந்தமிழர் நரந்தம் புல்லொடு கங்கை யாற்றையும், இமயத்தையும், கவரி மானையும் இணைத்தே அறிந்திருந்தனர். இச் செய்தி பண்டைக் கிரேக்க ஆசிரியரான இப்போகிரேட்டஸ் (சசுO கி. மு.) என்பவர் எழுதியிருக்கும் செய்தியொடு ஒத்திருப்பது மிகவும் வியப்பைத் தருவதாகும். இந்தக் கிரேக்க ஆசிரியர் இந்தியாவில் கிடைக்கும் மருந்துச் செடிகளான மிளகு, இஞ்சி, நரந்தம் ஆகியவைகளைப்பற்றிக் கூறியிருக்கிருர். நரந்தத்தை இவர் "Nardin of gangetis" என்றழைக்கிருர். பட்டினப்பாலை "கங்கை வாரி" என்று அழைப்பது போல 'கங்கை நரந்தம்' என்று அழைக்கிருர். இம்முறையில் அழைக்கப் படுவதற்குக் காரணம், கங்கையாறு நரந்தம் புல் விளையும் மலைச் சாரலின் வழி பாய்ந்ததுதான். இச் செய்தி 'பரந்திலங் கருவி யொடு நரந்தங் கனவு மாரியர் துவன்றிய பேரிசை இமயத் தொடு' என்று வரும் பதிற்றுப்பத்துச் செய்தியுடன் ஒத்திருப்பது மிகவும் வியப்பைத் தருவதாகும். 'நர்தின்' (Nardin) என்ற கிரேக்கச் சொல்லே நரந்தம் என்ற சொல்லின் வேறு உருவமாகத் தெரிகின்றது. வடநாட்டில் நரந்தம் புல் விளையும் மலையையும் அதனருகில் பாயும் அருவியையும், அதை உண்ணும் கவரி மானையும் சங்கநூற் புலவர்கள் உணர்ந்திருந்தனர். ஆனல் பிற்காலப் புலவர்களோ நரந்தம் என்பது புல்லோ பூவோ, கொடியோ, மரமோ என்று மயங்குமளவு அறிவுலகில் பின் தங்கிவிட்டனர். சேந்தன் திவாகரம் 'நரந்தம் நாரத்தை ஆகுமென்ப' என்று கூறுகின்றது. பிங்கலந்தை நிகண்டு "நார, நரந்த, நாரங்க, நாரத்தை" என்று கூறுகின்றது. நிகண்டு ஆசிரியர்களுக்கும் நரந்தம் ஒரு நறுமணமான புல் என்பது தெரியாதிருந்ததெனத் தெளிவாகின்றது. நரந்தம் என்பதை நாரத்தை மரமாகப் பொருள் கொண்டிருக்கின்றனர். நாரத்தை மரத்தை 'நாரங்க' என்று மலையாளத்தில் கூறுவார்கள். நரந்தம் ஒரு புல் என்பதைப் பிற்காலத்தில் உணராது போகவே அதன் பெயர் மறக்கப்பட்டு இக் காலத்தில் 'எலுமிச்சம் புல்' என்று அழைக்கப்படுகின்றது.

# "மாறிப் பிறப்பின் இன்மை"

[திரு. கு. பரமசிவன், எம்.ஏ.]

பாவல்ல காவலருள் ஒருவன் கோப்பெருஞ்சோழன். குறுந்தொகையுள் நான்கும் புறநானூற்றுள் மூன்றும் ஆக இவன் பாடிய ஏழினுள்ளும், உரைப்போர் இன்பமுறுமாறு ஒப்பற்ற அழகுடன் உயரிய உண்மையை எடுத்துச் சொல்வது இவன் 'வடக்கிருந்தான் சொற்ற' பாட்டு :

"செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே ;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே ;
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே ;
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும் ;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும் ;
மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்
கோடுஉயர்ந் தன்ன தம்இசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே." (உகச)

மாசு நிறைந்த அறிவினர் - மனவுரம் அற்றவர் தாம். 'எப்போது நல்வினை செய்யலாம் ?' என்னும் ஐயம் எப்போதும் உடையவர். நன்றே செய்தல் வேண்டும் ; இன்றே செய்தல் வேண்டும். இவ்வுண்மையை வலியுறுத்தும் பொன்றாப் புகழுடைய இச்செய்யுளின் பிற்பகுதி நல்வினையின் பயன்களை விளக்குகிறது. நல்வினையாலேயே இன்பம் நுகரும் வாய்ப்பு நண்ணும் என்பதும், நண்ணுமேல் எவ்வெவ் வின்பம் எய்தலாகும் என்பதும் உரைக்கப் படுகின்றன.

நல்வினை யுடையார் பெறலாவன மூன்று. தொய்யா உலகத்து நுகர்ச்சி, மாறிப்பிறப்பின் இன்மை, இசை நட்டு மாய்தல்.

இவற்றுள் தொய்யா உலகத்து நுகர்ச்சி என்றது, 'இருவினையும் செய்யப்படாத உம்பர் உலகத்தின்கண் இன்பம் அனுபவித்தல்' (பழையவுரை). கோப்பெருஞ்சோழன் தன் மக்களொடு போர் செய்யாவாறு பாதுகாத்த புல்லாற்றூர்

எயிற்றியனாரும் இக்கருத்தையே தம் பாடலின் ஈற்றினில் வைத்து வலியுறுத்துகிறார் :

"செய்தல் வேண்டுமால் நன்றே, வானோர்
அரும்பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே" (உ௧௩)

புறநானூற்றுப் புலவர் பிறரும் இதனையே பலவாறு புகன்றுள்ளனர் :

"பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை" (உ௮)

" ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச் சென்று உணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் " (௧௭௪)

இனி மூன்றும் பயனாகக் கூறப்பட்டது இசை நட்டு மாய்தல். அஃதாவது 'புகழை நிலைபெறுத்தி இறத்தல்.' இதனையே மன்னன், 'இமயமலையின் சிகரம் ஓங்கினாற்போன்ற புகழை நிலைபெறுத்தி வசையில்லாத உடம்போடு கூடி நின்று இறத்தல்' (பழையவுரை) என்று அழகுபட விரித்துக் கூறினான். புல்லாற்றூர் எயிற்றியனாரும்,

"பரந்துபடு நல்லிசை எய்தி மற்றுநீ
உயர்ந்தோர் உலகம் எய்தி"

என மொழிந்தார். ஏனையோரும்,

" மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே " (உ௧௨)

எனவும்,

"வசையும் நிற்கும் இசையும் நிற்கும்
அதனால், வசை நீக்கி இசை வேண்டியும்...
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டுநீடு விளங்கும்நீ எய்திய புகழே" (௧௬௫)

எனவும் தெளிவித்தனர்.

இனிப், பெருஞ்சோழன் கூறிய அரும் பயன்களுள் இடைநின்றது, "மாறிப் பிறப்பின் இன்மை" "மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்" எனும் வரிக்குப் பழையவுரைகார் 'மாறிப் பிறத்தலிலே கூடும் பிறப்பின்கண் இன்மை எய்தவும் கூடும்' எனப் பொருள் வகுத்தார். பிறப்பாவது பிறவி. "பிறப்பு ஓரன்ன உடன் வயிற்றுள்ளும்" (௧௩௮) என் புழியும் இச்சொல் இப்பொருளில் நின்றது. மாறி எனும்

எச்சத்தை முடித்தற்குப் 'பிறத்தல்' தொழிலை உரைகாரர் வருவித்தனர். 'மறு பிறவியில்' என்பது தெளிவு. 'இன்மை' யாது? பழைய உரையாசிரியர் இச்சொல்லையே பொருளாக உரைத்தனர்; ஆகலின் அவர் கருத்தினை யுணர்ந்திட வழியில்லை; ஆயினும் 'பிறப்பின்கண்' என ஏழனுருபும் எய்தவும் எனுஞ் சொல்லும் வழங்கியமையால் இவ்வின்மை எய்தலாகுமொரு பொருள் எனக் குறித்தவராவர்.

'இன்மை'ச் சொல்லின் பொருள் பாடற்கருத்தொழுங்கிற்கு ஏற்றதாய் அமைதல்வேண்டும்.

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே"

என்ற அளவில் நில்லாது, "உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசினோர்" பெறுவன மூன்றினையும் ஒரு நிரல்பட அமைத்துள்ளான். முதலிற் கூறப்பட்ட தேவருலகமே "வாரா உலக" (௩௪௪) மாக (ப் பிறவாப் பேரின்ப நிலையாக) அக்காலத்து' மதிக்கப் பட்டது.

"தேவருலகம் எய்தினன்"　　　　(உஉஅ)

"மேலோ ருலகம் எய்தினன்"　　　　(உஉ௧) (உ௪0)

"உயர்நிலை யுலகம் அவன் புக"　　　　(உ௪௬)

எனவரும் சான்றோர் செய்யுட் பகுதிகளே சான்றும். பழைய உரைகாரர் 'இருவினையும் செய்யப்படாத உம்பருலகம்' என்றதும் இக்கருத்துக்கு அரண்செய்வதாகும். இறுதியிற் கூறப்பட்டது இவ்வுலகத்துப் புகழ். இத் தொடுப்பே நமக்கு ஒருண்மையைப் புலப்படுத்தும். யானை வேட்டுவன் யானையும் பெறுவான். யானைக்குக் குறிவைத்த அம்பின் ஆற்றற் குறைவினால் ஒருகால் யானை பெறாவிடினும் புலியோ, அதுவுந் தப்பின் புள்ளி மான்களையோ பெறுதல் கூடும். அவ்வாறே நல்வினை செய்பவர் தொய்யா உலகத்து நுகர்ச்சி எய்துவர். நோற்றற் குறைவினால் நுகர்ச்சி இல்லையெனினும் மாறிப் பிறப்பின் இன்மையோ, அதுவுமின்றேல் இசைநட்டு மாய்தலோ கைவரப்பெறுவர். இக் கருத்தினையே இம்மூன்றில் தொடுப்புமுறை உணர்த்துகிறது. (குறும்பூழுக்குக் குறிவைத்ததோ வீணே கழியும். சிற்றின்பக் குறிக்கோளொடு செய்வினையும் வீணே) எனவே "மாறிப் பிறப்பின் இன்மை" நுகர்ச்சியின் தாழ்ந்ததாகவும் இசையின் உயர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

இத்தகு சூழலுக் கேற்ற பொருளையே "இன்மை"க்கு உரைத்தல் நேரிதாகும். அல்லாமற் "பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி", (கசுச) "நீஇர் இன்மையின் கன்று மேய்ந்துகளும்" (௩௫௫) எனுமிடங்களிற் போன்று இங்கும் 'இல்லாமை' என வுரைத்தல் ஏற்புடைத்தாகத் தோன்ற வில்லை. 'மாறிப் பிறத்தலிலே கூடும் பிறப்பின்கண் இல்லாமை' என்பது சொல்லளவிலும், சுற்றிவளைத்து மூக்கினைத் தொடுவது போன்றதுதான். பிறவாமை என்பது கருத்தெனின் அவ்வாறேயோ, 'பிறப்பின்மை' என்றே கூறிச் செல்லலாமே? "மாறிப் பிறப்பின் இன்மை" என்பானேன்? பொருளளவினும் அது பொருத்தமன்று. பிறவாமைக்கும் பேரின்ப நிலைக்கும் வேறுபாடு யாது? தொய்யா உலகத்து நுகர்ச்சி "மற்றீண்டு வாரா நெறி" யே யன்றோ?

பிறவா நிலையை யடுத்து மறுபிறவியைத் தான் பெருஞ் சோழன் பேசுகிறான். அடுத்துவரும் "மாறிப் பிறவார் ஆயினும்" எனும் தொடரையும், அதற்கு, 'மாறிப் பிறவார் என்று சொல்லுவார் உளராயின்' எனவரும் பழைய உரை யையும் சிந்தித்துப் பார்ப்பின் இவ்வுண்மை புலனாகாமற் போகாது.

இவற்றால் மறுபிறப்பில் அடையக் கூடிய ஒன்றாகவே "இன்மை" இருத்தல் வேண்டு மென்பது பெறப்படும். "இன்மை துரப்ப இசைதர வந்து (கசு௫) "இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்" (கசு௫) எனுந் தொடர்களிற் போன்று ஈண்டும் இன்மை வறுமையைக் குறிக்குமெனல் ஒவ்வாது. மறுபிறவியில் வறுமையுறுவது நல்வினையின் பயனாகுமோ? இன்மை இன்பமாதலே ஏற்புடையது. ('இன்மை' இப்பொருளில் ஒரு காலத்து வழங்கியிருக்குமென்பது தமிழ்ப் பெரியார் திரு, வி. க. அவர்கள் கருத்துமாகும். அன்னாரது "திருக்குறள் விரிவுரை" காண்க.)

'பேரின்பநிலையும் அஃதிலையேல் மறுபிறப்பில் இன்பமும், மறுபிறப்பே இல்லை என்போர் உளராயின் உலகமொடு நிலைஇய புகழும் நல்வினையின் பயன்களாகும்' எனக்கூறி நல்வினை செய்தலை வற்புறுத்துதலே கோப்பெருஞ்சோழன் கருத்தாகலாம்.

---

# தொல்காப்பிய "ஆராய்ச்சிக்"காரர்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

தொல்காப்பியத்தைப் பற்றியும் தொல்காப்பியரைப் பற்றியும் சிலர் ஆராய்ந்து எழுதியுள்ளனர். இவர்களில் சிலர், தொல்காப்பியம் பிற்காலத்து நூல், அதாவது கி. பி. 400-க்குப் பிறகு எழுதப்பட்ட நூல் என்றும், தொல்காப்பியத்தில் கூறப்படும் கருத்துக்கள் சில வடமொழி நூல்களில் இருந்து எடுக்கப்பட்டவை என்றும், கற்பு முறையைத் தமிழர்களுக்குக் கற்பித்தவர் ஆரியப் பார்ப்பனர் என்றும் இந்த "ஆராய்ச்சிக்"காரர்கள் எழுதியுள்ளனர். யானைகண்ட பிறவிக் குருடர்கள், யானை முறம் போல இருக்கிறது என்றும், யானை உரல்போல இருக்கிறதென்றும், யானை உலக்கைபோல இருக்கிறதென்றும், யானை துடைப்பம் போல இருக்கிறதென்றும் கூறினதுபோல, இந்த "ஆராய்ச்சிக் குருடர்களும்" உண்மையறியாமல் தங்கள் மனம் போல எழுதியுள்ளனர். இவர்கள் கூறுவதற்குத் தக்க விடை கூறி உண்மையை நிலைநாட்டவேண்டுவது கற்றறிந்தவரின் கடமை அல்லவா? முதலில் இந்த "ஆராய்ச்சிக்" காரர்கள் தொல்காப்பியத்தைப் பற்றிக் கூறுவதைப் பார்ப்போம்.

கே. ஜி. சங்கர் என்பவர் 1924இல் "சங்கநூல்களில் மௌரியர்" என்னும் கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் இவர் கூறும் கருத்தின் சுருக்கம்:

" அகநானூறு 251ஆம் செய்யுளில், தமிழ்நாட்டு மோகூர் மன்னனுக்கு எதிராகப் போர் செய்ய வந்த கோசருக்கு உதவியாக மௌரியர் வந்தனர் என்று கூறப்படுகிறது. இந்த மௌரியர் அல்லது மோரியர் என்பவர், கி. மு. 324 முதல் கி.மு.187 வரையில் மகதநாட்டை அரசாண்ட பழைய மௌரியர் அல்லர்; கொங்கண நாட்டை அரசாண்ட "திரைகூடகர்" என்னும் அரசர் காலத்திற்குப் பிறகு அரசாண்ட மௌரியர் ஆவர். இவர்கள் கி. பி. 6, 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் கொங்கண நாட்டை அரசாண்டார்கள். இந்த மௌரியர் கொங்கண நாட்டுக்குக் கி. பி. 494 இல் வந்தார்கள். ஆகவே, மௌரியரைக் கூறுகிற இந்தச் சங்கச் செய்யுள் கி. பி. 500க்குப் பிறகு எழுதப்பட்டதாதல் வேண்டும். ஆகவே சங்க நூல்களும் கி. பி.500க்குப் பிறகு எழுதப்பட்டவை. தொல்காப்பியம் சங்க நூல்களுக்கு முற்பட்டகாலத்தில் எழுதப்பட்டதாதலால் அது கி.பி. 400க்குப் பிறகு எழுதப்பட்டிருக்க வேண்டும். ஹோரா என்னும் கிரேக்கச் சொல் தொல்காப்பியத்தில் ஓரை என்று கூறப்படுகிறது.

கி. பி. 378 இல் இருந்த Paulus Alexandrinus என்பவர் எழுதிய கிரேக்க வான சாஸ்திர நூலில் இருந்து இந்தச் சொல்லைத் தொல்காப்பியர் பெற்றிருக்கவேண்டும். ஆகவே, தொல்காப்பியம் கி. பி. 400க்குப் பிறகு எழுதப்பட்ட நூல்." இதுதான் கே. ஜி. சங்கர் என்பவர் எழுதியிருப்பதன் சுருக்கம். (The Moriyars of the Sangam Works by K. G. Sankar. PP 664-667. Journal of the Royal Asiatic Society 1924.)

1956இல் வெளிவந்த "தமிழ்மொழி தமிழ் இலக்கியவரலாறு" என்னும் ஆங்கில நூலில் திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்களும் தொல்காப்பிய நூலின் காலத்தைப்பற்றி ஆராய்கின்றார். சங்க நூல்களில் மௌரியர் என்னும் அரசர் கூறப்படுவதைக் குறிப்பிட்டு, இந்த மௌரியர் சரித்திரத்தில் கூறப்படும் மௌரியர் அல்லர் என்று ஐயம் கொள்கிறார். (பக்கம் 12.)

மேலும் வையாபுரிப் பிள்ளை கீழ்க்கண்டபடியும் எழுதியுள்ளார்:— மனுதர்ம சாஸ்திரத்தில் கூறப்படுகிற சமுதாயத்தைப் பற்றிய சில செய்திகளைத் தொல்காப்பியர் தமது தொல்காப்பிய நூலில் எழுதியிருக்கிறார். இதனால் தொல்காப்பியர் கி. பி. 200-க்குப் பிற்பட்டவர் என்பதைத் தெரிவிக்கிறது. கௌடல்யர் தமது அர்த்த சாஸ்திரத்திலே எழுதியிருக்கிற 32 உத்திகளைத் தொல்காப்பியர் எடுத்துத் தொல்காப்பிய நூலில் எழுதியுள்ளார். வடமொழியில் உள்ள பரத நாட்டிய சாஸ்திரத்திலிருந்தும், வாத்சாயனரின் காமசூத்திரத்திலிருந்தும் சிலவற்றை எடுத்துக்கொண்டார். எட்டு மெய்ப்பாடுகளையும், தசாவஸ்தைகளையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். இவையெல்லாம், தொல்காப்பியம் கி. பி. 4-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுதப்பட்டது என்பதைக் காட்டுகின்றன. ஆகவே, தொல்காப்பியர் காலம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டு என்று சொல்லலாம். வச்சிர நந்தி நிறுவிய பேர்போன திராவிட சங்கம் கி. பி. 470இல் நிறுவப்பட்டது என்பதும் இதற்குச் சாதகமாக இருக்கின்றது. இந்தத் தமிழ்ச் சங்கத்தில் எழுதப்பட்ட முதல் நூல் தொல்காப்பியமாக இருக்கலாம். தொல்காப்பியம் ஓரை என்னும் (வடமொழியில் ஹோரா) என்னும் கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்துகிறது. கி. பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் வடமொழியாளர் தாம் எழுதிய சோதிட சாஸ்திர நூல்களில், ஹோரா என்னும் கிரேக்கச் சொல்லைக் கடனாகப் பெற்றுக்கொண்டு எழுதினார்கள். வடமொழியாளர் உபயோகப்படுத்திய ஹோரா என்னும் சொல்லைத் தொல்காப்பியர் ஓரை என்று பயன்படுத்தியுள்ளார். எனவே, தொல்காப்பியம் கி. பி. 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல். (பக்கம் 14.)

மேலும் பிள்ளையவர்கள் எழுதியுள்ளார்:- "தொல்காப்பியர் காலம் விவாதத்திற்குரியது. ஆனால், தொல்காப்பியர் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன" (பக்கம் 65 - History of Tamil Language and Literature. by Prof. S. Vaiyapuri Pillai. 1956)

வையாபுரிப்பிள்ளை இன்னொரு கட்டுரையில், தொல்காப்பியர் கி. மு. 150க்குப் பிற்பட்ட காலத்தவர் என்று எழுதியுள்ளார். தொல்காப்பியர் பதஞ்சலியின் சூத்திரங்களைக் கையாளுகிறார் என்றும் ஆகவே பதஞ்சலியின் காலமாகிய கி. பி. 150-க்குப் பிற்பட்டவர் தொல்காப்பியர் என்றும் எழுதுகிறார். (Tolkappiyar and Patanjali. by Rao Sahib S. Vaiyapuri Pillai. PP. 134–138. Dr. C. Kunhan Raja Presentation Volume. Madras-1946)

மேலும் வையாபுரிப் பிள்ளை, தமது இலக்கியதீபம் என்னும் நூலில் (பக்கம் 131-144), தொல்காப்பியர் கி. பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்பதை எழுதியுள்ளார்.

இனி, மு. இராகவையங்கார் அவர்கள்,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்குப் பொருள்கூறியபோது, தமிழர்களுக்குக் கற்புத் தெரியாது என்றும், ஆரியப் பார்ப்பனர் வந்து, மணம் செய்துகொண்டு கற்புடன் வாழும் முறையைக் கற்றுக்கொடுத்தார்கள் என்றும் எழுதியிருக்கிறார். (தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி. மு. இராகவையங்கார்.)

இந்த ஐயங்கார் எழுதிய இதே செய்தியை இன்னோர் ஐயரும் எழுதியுள்ளார். பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் தாம் எழுதிய தொல்காப்பிய ஆங்கில உரையில் இதனை எழுதியிருக்கிறார். தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே ஆரியப் பார்ப்பனர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தனர் என்றும், அந்தப் பார்ப்பனர் கற்பு முறை தெரியாத தமிழர்களுக்குக் கற்பு முறையைக் கற்றுக் கொடுத்தார்கள் என்றும் எழுதியிருக்கிறார். (பக்கம் 92-, Tolkappiyam. Porul Atıkaram by P. S. Subramaniya Sastri. The Kuppuswami Sastri research Institute. Mylapore. Madras 1949).

இவ்வாறு ஐயங்காரும் ஐயரும், ஆரியப் பார்ப்பனர் தமிழர்களுக்குக் கற்பு முறையைக் கற்றுக்கொடுத்தார்கள் என்று தொல்காப்பியர் கூறியுள்ளதாக எழுதியுள்ளனர்.

இந்தச் சுப்பிரமணிய சாஸ்திரி, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சம்ஸ்கிருத ஆசிரியர். இவர் 1946ஆம் ஆண்டில், திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்திலே, "தமிழுக்கும் சம்ஸ்கிருதத் திற்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆராய்ச்சி" என்னும் தலைப் பில் சொற்பொழிவுகள் செய்தார். அச் சொற்பொழிவுகள் புத்தகமாக அச்சிடப்பட்டுள்ளன. அதில் தொல்காப்பியத்தைப் பற்றியும் தொல்காப்பியரைப் பற்றியும் கூறியுள்ளார். இதிலும், பார்ப்பனர் தமிழருக்குக் கற்பைக் கற்றுக்கொடுத்தனர் என்று எழுதியுள்ளார். அன்றியும், சம்ஸ்கிருத இலக்கணத்திலிருந்தும், தர்ம சாஸ்திரம், காமசூத்திரம், கௌடல்லியர் அர்த்த சாஸ்திரம் முதலிய வடமொழி நூல்களில் இருந்தும் சில கருத்துக்களைத் தொல்காப்பியர் எடுத்துத் தொல்காப்பியத்தில் எழுதியுள்ளார் என்று இவர் எழுதியுள்ளார். இந்நூலில் இவர் கூறியுள்ளவற்றை எழுதினுல் இடம் பெருகும் என்று அவற்றையெல்லாம் இங்கு எழுதவில்லை வேண்டுவோர் அந்நூலில் காண்க. (An enquiry into the Relationship of Sanskrit and Tamil. by Vidyaratna P. S. Subramaniya Sastri. Travancore University Publications English No. 2. University of Travancore 1946. Price Rs. 2-4-0)

இவ்வாறு தொல்காப்பியர் காலத்தைப் பற்றியும் தொல் காப்பிய நூலைப்பற்றியும் இவர்கள், யானைகண்ட பிறவிக் குருடரைப் போல, "ஆராய்ச்சி"களை எழுதியிருப்பதை அறிஞர் கள் ஏற்றுக்கொள்கிறுர்களா? "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினுல் மெய்போலும்மே மெய்போலும்மே" என்பதற் கிணங்க, மெய்போலத் தோன்றுகின்ற இந்தப் பொய்யுரைகளை உண்மை என்று ஏற்றுக்கொள்வது அறிஞர்களுக்கு அழகாமோ? மேற்போக்காகப் பார்க்கிறவர்களுக்குப் பரம உண்மை போலவும், அசைக்கமுடியாத ஆராய்ச்சி போலவும் காணப்படுகிற இந்தப் பொய்க்கூற்றுக்களை பிட்டுப்பிட்டுக் காட்டி, அலசிஅலசிக்காட்டி உண்மையை நிலைநாட்டவேண்டுவது கற்றறிந்தோர் கடமை யல்லவா? பாவாணர்களும் கவிவாணர்களும, வித்துவான்களும், புலவர்களும், டாக்டர்களும் புரொபசர்களும் இப் பொய்க்கூற்று களுக்குத் தக்க விடை எழுதி உலகததுக்கு உண்மையைக் காட்டுவார்கள் என்று நம்புகிறேம்.[1]

---

1. இதிற்காணும் மாறுபாடுகளைச சான்றுகளுடன் விளக்கிக் கட்டுரையாசிரியர் தொடர்ந்தெழுதுவர்.

—ஆசிரியர்.

# வான்

[மருதூர், திரு. இளங்கண்ணன், M. O. L.]

நீல வானே! நீலவானே!
கோலம் பலமலி நீல வானே!
அன்பும் ஆவலும் வியப்புமென் றிவைபோல்
கருத்துப்பொரு ளல்லது காட்சிப் பொருளில்
உன்விரி வினுக்கோர் உவமையும் உளதோ?
எண்ணருங் கோள்களும் நின்னகத் தடக்கம்;
ஒருநாள் அரியதை ஒருநாள் அளந்துகண்டு
இறும்பூ தென்னும் பெருங்கடற் றிளைப்பினும்
என்றுமீங் கிலர்மன் நின்னளந் தறிவோர்;
கடற்கரை மணலினுங் கவின்புற் றரையினும்
கிடந்துநின் எழில்கண் டுவத்தொறும் உவத்தொறும்
நின்னக மெல்லாம் நீந்திவிளை யாடற்கு
என்னகத் தாவலோ நின்போல் விரிந்தென்!
பறத்தற் கியலாப் பருவுடல் பெற்றேன்!
நின்றுஞ் சுழன்றும் நெடுஞ்சேண் பறக்கும்
பருந்தினங் காண்தொறும் வருந்துமென் நெஞ்சம்!
அதன்றலை,
புண்ணக நீரோ புழுக்கடை நீரோ
மழைபொழி முகிலாய் மாறிய வாய்ப்பால்,
இறக்கையும் உயிரும் இலதே யாயினும்
வனப்புமிழ் மாலைப் பொற்கதிர் முழுகி
வண்ணம் பலபொலிந் துன்னகத் துலவக்
காண்தொறுங் காண்தொறுங் கலிழுமன் நெகிழ்ந்தே!
சின்னாட் கனவிடை, நின்னகந் தவழ்ந்து
யாறொடு பூம்பொழில், யாணர் மாமலை,
பேரிருந் திரைக்கடல், பிறங்குமலர்ப் பொய்கை
இனையன வழங்கும் 'இறைமை'க் காட்சியை
ஓரிடத்திருந்தே ஒளிவிழிப் பயனெனக்
கண்டுகண் டுவக்கச் சென்றிடும் பொழுதே
என்னுளே தழைத்த எல்லா மகிழ்வையும்

அந்தோ மாய்க்குமன் அன்பிலா விழிப்பே !
ஆறறி வுயிர்பிறப் படைந்ததன் பயன்கொல்
நினைதொறும் நெஞ்சம் நெகிழுமித் தண்டம் !
அழகியல் உணர்ச்சி அளித்ததென் றியம்பின்
அந்தோ கொடிதுகொல் அழகியல் உணர்ச்சி !
எழில்விரி வானே ! இருபெருங் கதிர்காள் !
புள்ளே ! விலங்கே ! பூம்புனல் யாறே !
அசைமரஞ் செடிகாள் ! ஆடெழிற் கொடிகாள் !
மண்வழிக் கிடந்து விண்வழி நோக்கிப்
புண்படு நெஞ்சத்து என்முகம் நோக்கி
அறையுமின் கொடிதோ அழகியல் உணர்ச்சி ?
துன்பிடை நும்மைத் துணையென மதித்தேன் !
மண்டுபே ருணர்ச்சியை வளர்ப்பதை யல்லால்
அன்புகொண் டொருசொலும் அருளுதற் கறியீர் !
என்னைப் படைத்த இயற்கையை யல்லால்
என்குறை தீர்ப்போர் யாருளர் உலகில் !
அன்னை இயற்கையே அருளா நிலையில்
யாங்ஙனம் புலம்பி யார்க்கழு துரைத்தென் !
போயிடும் உயிர்க்குப் புதுப்பிறப் புண்டெனின்
இனிவரும் பிறப்பிடை யாதல்
வாய்க்குமா வான்தவழ் வான்பிறப் பெனக்கே !

---

## மொழியும் உண்டுமோ ?

[நாஞ்சில் திரு. கா. கணபதி]

மன்னும் தமிழ்மொழி எங்கள் மொழியே
மாநிலத்தில் இம்மொழிபோல் பிறிதில்லையே
உன்னும் கருத்தெலாம் உவந்து கூட்டுமே
உணர்வரிய நல்லின்பம் அணைந்து காட்டுமே
அன்னையினும் அன்புதவழ் அருமை சேர்க்குமே
ஆர்வமுடன் கற்பதற்கு அறிவை ஊக்குமே
கன்னலினும் கண்டினிலும் இனிமை கனியுமே
கருதரிய தமிழ்க்குநிகர் மொழியும் உண்டுமோ?

# உரிச்சொல்லும் வேர்ச்சொல்லும் ஒன்றா?

[திரு. மு. சதாசிவம், எம். ஏ.]

தமிழ்மொழிக்கண் வழங்கும் இயற்சொற்களைப் பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்குவகைப் படுத்துக் கூறுவர் தொல்காப்பியர். இவற்றுள் உரிச்சொல்லைப் பற்றிய தெளிவான கருத்து இக்காலத்தில் இன்றியமையாததெனக் கருதப்படவில்லை. உரிச்சொல்லியல் என்ற பிரிவு இக்கால இலக்கண நூல்களுள் உரிய இடம் பெறாது சிறப்பிழந்து வருகிறது. தொல்காப்பியத்திற்குப் பின்னரெழுந்த இலக்கணங்களுள் தலையாய நன்னூலும் உரிச் சொற்களைப் பற்றி விரிவாகக் கூறவில்லை. எனவே உரிச் சொல்லைப் பற்றிய அறிவைப் போற்றி வளர்த்துவர மறந்தனர் தமிழ் மக்கள் எனலாம்.

பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் என்ற இவை சொல்லியவளவில் தெற்றெனப் பொருள்புலப்படுமாறு போல, உரிச்சொல் என்றதும் அதன் தெளிவான பொருள் நமக்கு விளங்கக் கூடவில்லை. இதற்குக் காரணம் 'உரிச்சொல்' என்ற தொடர் பெருவரவிற்றாய வழங்கற்பாடு எய்தாமையே யாகும். உரிச்சொல் என்பதற்கு உரிமையுடைய சொல் என்பதே நேரிய பொருளாகும். ஆனால் 'எதற்கு உரிமையுடைய சொல்?' என்ற வினாவிற்கு உரிய விடை காண்பதிலேதான் கருத்து வேறுபாடும் சிக்கலும் காணப்படுகின்றன. உரிச்சொல் என்பது பெயர்ச்சொல்லின் பண்பை விளக்கிவரும் அடைமொழியா (adjective)? வினைச்சொல்லின் பொருளை விளக்குவதொரு சார்புச் சொல்லா (adverb)? செய்யுட்கே உரிய சொல்லா? மரபுச் சொற்களைப்போலச் சிறப்புப் பொருள் பெறுதற்குரிய சொல்லா? மொழியின் சொற்கள் எல்லாம் பிறத்தற்குரிய வேர்ச் சொல்லா? என்பன போன்ற கேள்விகள் நம் உள்ளத்தில் பிறக்கின்றன. உரிச்சொல் என்பது பெயரடைமொழி என்றும், வினைச்சார்புச் சொல் என்றும், செய்யுளுக்குரிய சொல் என்றும், மரபுத் தொடர்களோடு ஒரு சார் ஒப்புடைய சொல் என்றும் ஒவ்வொரு காலத்தில் பொருள் கூறப்பட்டு வழங்கப் பட்டுள்ளன. இக்காலத்தில் உரிச்சொல்லும் வேர்ச் சொல்லும் ஒன்றே என்ற கருத்தினைச் சில பேராசிரியர்கள் கூறுகின்றனர். உரிச்சொல்லின் இலக்கணத்தைத் தெளிவுபட வரைந்த தொல் காப்பியரின் நூலில் இக்கருத்துக்கு இடம் உள்ளதா என்று ஆராய்வதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

அறிவியல் வளர்ந்துவரும் இக்காலத்தில் புது ஆய்வுரைகளோ, அறிவியல்சாதனைகளோ பிற நாட்டினரால் செய்து வெளிப் படுத்தப்பெறின் இவையெல்லாம் பண்டைக் காலத்திலேயே எங்கள் தமிழ் நூல்களில் கூறப்பட்டனவே யன்றி இவற்றில் புதுமையொன்றுமில்லை என்று கூறும் வழக்கம் சிலரிடையே இருந்து வருகிறது. இம்மனப்பான்மை புதிய கருத்துக்களைப்பற்றிய விளக்கமான அறிவை நாம் பெற்றுச் சிறப்படையத் தடையாயிருக்கிறது. வேர்ச்சொல்லைப்பற்றியும் தொல்காப்பியர் கூறாமல் விடவில்லை என்று சொல்வதால் தொல்காப்பியருக்குப் பெருமை தேடித் தருகிறோம் என்று நினைக்கலாம். ஆனால் வேர்ச் சொல்லைப் பற்றித் தொல்காப்பியர் கூறியவற்றை விளக்கமாக வரைந்து காட்டுக என்று கேட்கும்போது இடர்ப்படும் நிலையே வந்தெய்துகிறது.

இனி, உரிச்சொல் பெயர்க்கோ வினைக்கோ அல்லது இரண்டிற்குமே உரிமை யுடைய சொல் எனக் கொள்ளலாமோ வெனின், தொல்காப்பியர் கருத்துப்படி உரிச்சொல், இடைச் சொல்லைப் போலப் பெயரையும் வினையையும் சார்ந்து பிறப்பதே யன்றி அவற்றைச் சார்ந்தே வழங்கும் கடப்பாட்டைப் பெறவில்லை என்றறிகிறோம்.

"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்று வழிமருங்கின் தோன்றும் என்ப" (சொல்லதி. ௧௫௬) பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும் (பிறக்கும்) உரிமை இடைச் சொல்லுக்கும் உரியதாகலின், அஃது உரிச்சொல்லுக்கே யுரிய தனிச்சிறப்பு என்று கோடற்கில்லை.

உரிச்சொல் இசையினும் பண்பினும் குறிப்பினும் தோன்றி அவ்வப்பொருள்களைக் குறிக்கும் எனத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறுவதால், அது பெயரடைமொழி (adjective) என்றும், வினைச்சார்புமொழி (adverb) என்றும் ஒரோவழிக் கூறப்படுவதில் இழுக்கில்லை. ஆனால் உரிச் சொல்லென்பது பெயரடைமொழியே அல்லது வினைச்சார்புச் சொல்லே என்றறுதியிட்டுக் கூறுதல் ஒண்ணாது.

மொழிக்கண் சிறப்புவழக்குடைய மரபுச் சொற்களைத் தனியே மரபியலில் எடுத்தோதுகின்றார் தொல்காப்பியர். மரபுச் சொற்களைப் போலச் சிறப்புப் பொருள்களைப் பெற்று (தொல்காப்பியர் கூறிப் போந்த பொருள்களைப் பெற்று) வழங்குவனவே உரிச் சொற்கள் என்று கருதி மயங்குவாருமுளர். ஆனால் தொல்காப்பியர் எடுத்துக் காட்டிய உரிச்சொற்கள் ஒரு சிலவே; எடுத்துக்காட்டாத உரிச்சொற்கள் எண்ணில்லாதவை. மேலும் அவர் எடுத்துக்காட்டிய உரிச் சொற்கள்கூட அவர் கூறிய

பொருள்களைப் பெற்று வழங்கும் என்ற நியதியில்லை; காலத்திற் கேற்ப அவை பொருள்மாறுபாடுகளை எய்துவனவே என்பதை உரியியலின் ஈற்றில் தொல்காப்பியரே உணர்ந்து கூறியுள்ளார். தொல்காப்பியர் எடுத்துக்காட்டிய மரபுச்சொற்களில் பல மரபிழந்து, வழக்கிழந்து போனமை போலவே, உரிச் சொற்கள் சிலவும் வழக்கிறந்து, புதுப் பொருள்கள் பெற்று வழங்கு கின்றன. எனவே மரபுச்சொற்களைப் போலச் சிறப்புவழக் காற்றை—சிறப்புப்பொருளைப் பெற்றியங்குவனவே உரிச் சொற்கள் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று.

நன்னூலார் உரிச்சொல் என்பது செய்யுட்குரிய சொல்லே என்ற கருத்தினைக் கொண்டிருந்தார் (நன். ௪௪௨) என்பது தெரிகின்றது. சொற்பாகுபாட்டைக் கூறுங்காலை (நன். ௨௭O) முன்னோர் மரபினையொட்டி இயற்சொல்லுந் திரிசொல்லும் பெயர், வினை, இடை, உரி என்று நால்வகையாகுமெனத் தொகுத்துக் கூறியதனாற்றான் 'உரியியல்' என்ற தனிப்பிரிவில் சில கருத்துக்களைக் கூறும் கடப்பாட்டினைப் பெற்றிருந்தாரே யன்றி, தொல்காப்பியரைப்போல விரித்துக்கூறும் விருப்பங் கொண்டிருந்தார் என்று எண்ண முடியவில்லை. செய்யுட்கே யுரிய சொல் என்பது தொல்காப்பியர் கருத்துக்கு முரண் பட்டதாகலானும், உரிச் சொற்களில் பலவும் உரைநடைக் கண்ணும், உலகவழக்கினும் பயின்றுவருதலானும், நன்னூலார் கருத்து முற்றிலும் பொருந்துவதென்று கூறுதற்கில்லை. நன்னூலார் காலத்தில் உரிச்சொல் என்பது செய்யுட்குரிய சொல் என்ற பொருள் பெற்றிருக்கலாம் என்றே நாம் உய்த்துணரவேண்டியிருக்கிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்களும் உரிச்சொல்லைப்பற்றி வெவ்வேறான, ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்பது அவர்தம் உரைகளினின்று புலனாகிறது. தங்காலத்தோ டொட்டித் தொல்காப்பியத்திற்கு உரைவரைய விழைந்தனராதலின் உரையாசிரியர்களிடையே ஏற்பட்ட உரிச்சொல்லைப்பற்றிய குழப்பம், அவர்தம் காலத்தே உரிச்சொல்லைப்பற்றிய குழப்பம் இருந்துவந்ததையே குறிக்கும்.

தெய்வச்சிலையார் "உரிச்சொல் என்பது யாதோ எனின், ஒரு வாய்பாட்டாற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித் தாகி வருவது" என்று வரையறை கூறுகின்றார். ஆனால் இதில் வரும் 'வாய்பாடு' எப்படிப்பட்டது என்று உணர முடியவில்லை யாகலின், இவ்வரையறை தெளிவாக இல்லை எனக் கருதவேண்டி யிருக்கிறது.

சேனாவரையரும், சேனாவரையரை ஒட்டி நச்சினார்க்கினியரும், "இசை குறிப்புப் பண்பு என்னும் பொருட்கு உரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று" என்று கூறுகின்றனர். ஆனால் இது உரிச்சொல்லின் முழு வரையறை ஆகாது. உரிச்சொல்லின் ஒரு பண்பாகிய 'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றுதலை'க் குறிப்பிட்டு அப்படித் தோன்றுவதாலேயே உரிச்சொல்லாயிற்று எனக் கூறுவது அரைகுறை வரையறையேயாம். ஏனெனில் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களுங்கூட இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்வழியே தோன்றுதலுமுண்டு. அதனால் இப்பண்பு உரிச்சொற்கே உரிய தனிச்சிறப்பாகாது.

தாம் கூறியது முழுவரையறையன்று என்று சேனாவரையர் மனம் உணர்ந்துகொண்டதால், மேலும் அவர் "பெரும்பான்மையும் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று என்பாரும் உளர்" என்ற பிறர் கருத்தையும் ஒப்புக்கொண்டுள்ளார். இக்கருத்துத்தான் நன்னூலார் ஏற்றுக்கொண்டது; அவர் காலத்தில் எல்லோரும் கொண்டிருந்த பொருளாகத் தோற்றுவது. உலக வழக்குச் சொற்களும், உரைநடையில் பயின்று வரும் சொற்களும் செய்யுட்கண் சென்றேறுதல் உண்மையாகலின், இக்கருத்து இக்காலத்தில் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த கருத்தென்று கூறவியலாது. மேலும் செய்யுட்கேயுரிய சொல் என்று தொல்காப்பியர் உரியியலில் யாண்டும் வரையறுத்துக் கூறினாரிலர்.

இனி, உரையாசிரியர்களின் துணையை விடுத்துத் தொல்காப்பியரையே அணுகி உண்மைப் பொருள் காண்போம். உரிச்சொல் என்பது இன்னது என்பதைச் சொல்லதிகாரம் உ௬௭ ஆம் நூற்பாவில் (உரியியலின் தலைச்சூத்திரத்தில்) தெளிவுபடக் கூறியுள்ளார் தொல்காப்பியர். அவர் கருத்துப்படி ஒரு சொல் பல பொருட்கு இடனாகும் உரிமை பெற்றாலும் (காட்டு: கடி என்ற சொல் பல பொருள் பெறுதல்), பல சொல் ஒரு பொருளையே உணர்த்தும் உரிமை பெற்றாலும் (காட்டு: உறு, தவ, நனி முதலிய சொற்கள் மிகுதிப் பொருளைக் குறித்தல்), அவையெல்லாம் உரிச் சொல்லாம். இவ்வரையறையை அப்படியே நாம் ஏற்றுக்கொள்வதே குழப்பங்களைத் தவிர்க்கும் வழியாகும். அதே சூத்திரத்தில் உரிச்சொல்லின் பண்பினைப் பற்றித் தொல்காப்பியர் பேசுகிறார். உரிச்சொல் இசை, ஒலி இவற்றை அடியொட்டியும், குறிப்புப் பொருளை உணர்த்துவதாயும், பண்படியாயும் தோன்றுவதுண்டு என்கிறார். பெயர், வினைச் சொற்களினடியாகப் பிறந்து — பல பொருள் பெற்றும், ஒரு பொருட் பன்மொழியாகநின்றும் — பொருள் வேறுபாடுற்று. உரிச்சொல்

என்னும் பெயரைப் பெறும் என்பதே அவர் கருத்தாகக் கொள்ளற்பாலதாம்.

ஒரு பொருட் பன்மொழியாயும், பல பொருள் ஒரு சொல்லாயும் வரும் உரிமையுடைய உரிச்சொற்கள் மொழிக்கண் எண்ணிலவாய்ப் பரந்துபட்டுள்ளன. அவற்றுள் பொருள் எளிதில் புலப்படாத சில சொற்களை மட்டும் எடுத்துக்கொண்டு, அவற்றைப் பொருள் எளிதில் புலப்படும் சொற்களான் விளக்கிக் காட்டுகிறார் தொல்காப்பியனார்.

"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா;
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன" (தொல். எஅரு)

"செல்லல் இன்னல் இன்னா மையே" (தொல். எஅஎ)

என்ற நூற்பாவில், செல்லல், இன்னல் என்ற இரு சொற்களும் இன்னாமை என்ற பொருளையும் உணர்த்தும் என்று கூறுகிறார். அவ்வாறு உணர்த்தும்போது அவை உரிச் சொற்களாகும். செல்லல் என்பது செல்லுதலை உணர்த்தும்போது அது தொழிற்பெயராகும்; உரிச் சொல்லாகாது. 'புலம்பே தனிமை' (தொல். அகச) என்ற நூற்பாவில் புலம்பு என்ற சொல் தனிமைப் பொருளைக் குறிப்பின் அது உரிச்சொல்லாகும் என்று கொள்ளவைத்தார். புலம்புதல் அல்லது தனித்தழுதல் முதலிய பிறபொருள் பெற்றவிடத்து வினைச்சொல் அல்லது பெயர்ச் சொல்லாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்தருவனவெல்லாம் உரிச் சொற்கள் எனத் தொல்காப்பியர் உணர்த்துவதாகக் கொள்ளின் ஒரு மொழியில் அளவுபடாத சொற்கள் காலந்தோறும் இடந் தோறும் வெவ்வேறு பொருள்களைப் பெற்று வழங்கும் இயல்பின வாகலின் அவற்றையெல்லாம் உரிச் சொற்கள் என்று கூற வேண்டியிருக்கும். அவ்வாறாயின் அப்பிரிவில் எத்துணையோ பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் அடங்கிவிடும். உரிச் சொற்றொகை பெயர் வினைச் சொற்களின் தொகையைக் காட்டிலும் மிக்குச் செல்லும். எனவே தொல்காப்பியர்க்கு அது கருத்தன்று. இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப் பலபொருள் ஒரு சொல்லாயும், ஒருபொருட் பன்மொழியுமா வனவே உரிச்சொல்லாகும் எனக் குறிப்பித்தார். எனினும், உரிச் சொற்கள் எல்லாம் பெயர்ச் சொற்கள் வினைச்சொற்களினின்று தெற்றெனப் பிரித்துக் காட்டற்கியலாதனவாயிருப்பது ஒரு பெருங்குறைபாடே எனலாம். இக் குறைபாடே இலக்கண உரையாசிரியர்களை வெவ்வேறு பொருள்கூறச் செய்தது என்றும் கூறலாம்.

உரிச் சொல்லைப் பெயர், வினைச் சொற்களினின்றும் வேறு படுத்தியறிவதற்கு இன்னொரு சிறந்த குறிப்பினையும் கூறிப் போந்துள்ளார் தொல்காப்பியனார்.

"எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே" (தொல். அ௯அ)

என்ற நூற்பாவில், உரிச் சொற்களைப் பகுதி, விகுதி முதலியன வாகப் பிரித்துப் பொருள் காணல் கூடாது எனத் தெளிவுறுத்து கின்றார். இதிலிருந்து பகுதி, விகுதியாகப் பிரித்துப் பொருள் காண நேரும்போது அவை பெயர், வினைச்சொற்களாகக் கருதப் படும் என்பது புலனாகும்.

உரிச்சொற்களைப் பிரித்துப் பொருள் காணக் கூடாதெனப் பொதுவிதி கூறினாரேனும், இவ்விதிக்குச் சில புறனடைகளும் உள்ளன. ஓர் எடுத்துக்காட்டு 'இலம்பாடு' என்ற சொல்.

"இலம்பா டொற்கம் ஆயிரண்டும் வறுமை (தொல்: அ௪௩)

என்ற நூற்பாவில் வரும் 'இலம்பாடு' என்ற உரிச் சொல்லை 'இலம்+பாடு' என்று பிரித்தே உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர். 'இலம்' என்பதுதான் உரிச்சொல் என்றும், அது பெரும்பான்மையும் பாடென்னுந் தொழில் பற்றியல்லாது வாராமையின் இலம்பாடு என்று ('பாடு' என்ற சொல்லையும் சேர்த்து) ஒரு சொல்லாகக் கூறினார் என்பர் சேனாவரையர். 'இலம்படு புலவர்' என்ற தொடர்க்கு 'இலத்தால் பற்றப்படும் புலவர்' என்று **உரையாசிரியரும்**, 'இல்லாமை உண்டாகின்ற புலவர்' என்று நச்சினார்க்கினியரும் சொல்லைப் பிரித்தே பொருள் கூறுகின்றனர். 'இலம்' என்பது 'யாம் பொருள் 'இலம்' எனப் பொருள்படின் வினைமுற்றாகும். உரிச்சொல்லாக நிற்கும்போது படு வரும்; 'படு'வுடன் தோன்றினும் 'இலம்' என்பதே உரிச்சொல் என்று தெளிவுறுத்துகின்றனர் உரையாசிரியர்கள்.

இனித் தொல்காப்பியர், 'வம்புநிலையின்மை, மாதர்காதல், முரஞ்சன் முதிர்வே, வெம்மை வேண்டல், பொற்பே பொலிவு, வறிது சிறிதாகும் துவன்று நிறைவாகும், நன்று பெரிதாகும்' என்றிவ்வாறெல்லாம் உரிச் சொற்களுக்குப் 'பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப்' பொருளுரைத்துச் சென்றமை பிற்காலத் தில் பல்வகை நிகண்டுகளும், அகராதிகளும் தோன்றுதற்கு அடிகோலியது என்று கோடல் ஏற்புடைத்தாம்.

உரியியலில் எடுத்துக்காட்டப்பட்ட உரிச் சொற்களுக்குத் தொல்காப்பியர் கூறிய பொருள்களைத் தவிர வேறு பொருள்கள்

இல்லை என்று எண்ணுதல் கூடாது. காலப்போக்கில் அவற்றிற்குப் பல புதுப்பொருள்கள் தோன்றியுள்ளன; பழம் பொருள்கள் வழக்கிறந்தன. வேறுபொருள்கள் தோன்றினும் அவற்றையும் ஏற்றுக்கொள்க என்று தொல்காப்பியரே உணர்த்திப் போந்தார்:

"கூறிய கிளவிப் பொருணிலை யல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே" (தொல்: அ௭௩)

உரியியலை ஊன்றிநோக்கிப் படிக்குங்கால் உரிச்சொற்கள் எல்லாம் திருந்திய சொல்வடிவங்களேயாமென்றும், குறிப்பிட்ட பொருள்களைப் பெற்றவையென்றும் அறிகிறோம். வேர்ச்சொல் என்பது பல்வகைப்பட்ட சொற்களும் தன்னிடம் பிறத்தற்கிடனாய்த் திருந்திய சொல்வடிவு பெறாது, மரத்தினடிமரம் போலச் சொல்லின் அடிப்பகுதி மட்டும் பெற்றதாய், நிலையான சொல்வடிவம் பெறாததாய் இருப்பதாகும். ஒரு மொழியில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள வேர்ச்சொற்களே இருக்கும் என மொழியியலார் ஆய்ந்துரைக்கின்றனர். கடல்போல் பரந்துபட்ட சொற்றொகுதியுடைய வடமொழியின்கண்ணும் ஏறத்தாழ 1700 வேர்ச்சொற்களே உள்ளன என்று கூறுகின்றனர். தமிழிலுள்ள வேர்ச்சொற்களைக் கண்டுபிடித்து இத்துணையென அளவிட்டுக் கூறினார் எவருமிலர்.

வேர்ச்சொல்லைப் பற்றிய ஆராய்ச்சி அறிவியல் முறையில் கடந்த இருநூறாண்டுகளாகப் பிறநாடுகளில் நடைபெற்று வருகிறது. சொற்களைப்பற்றி ஆராயும் அறிவியலே வேர்ச்சொல்லியல் எனப்படும். மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் எடுத்துக்கொண்டு, அச் சொல் எப்படி உருவாயிற்று, எப்போது உருவாயிற்று, காலப்போக்கில் என்னென்ன மாறுதல்களை எய்திற்று என்றெல்லாம் வரன்முறையாக ஆய்ந்து, மொழியின்கண் ஒவ்வொரு சொல்லுக்குமுரிய இடம் எது என்றும் குறித்துக் காட்டுவதே வேர்ச்சொல்லியலின் குறிக்கோளாகும். எனவே இது வரலாற்றினடிப்படையில் இயங்குவது; சொற்களின் பொருள்களைமட்டும் கூறும் அகராதியினின்றும் வேறுபட்டது. வரலாற்று முறையில் முடிந்தவரை ஒவ்வொரு சொல்லின் மிகப் பழைய உருவத்தைத் தேடியறிந்து அது வழங்கற்பாட்டில் உற்ற வேறுபாடுகளை வரிசையாய் எடுத்துக் காட்டுவது. வேர்ச்சொல்லியல் சொல்லின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பற்றிக் கூறுவதேயன்றி, உரியியல் போலச் சொற்களின் பொருள்களை மட்டும் கூறுவதன்று.

சொற்களுக்கெல்லாம் வேர்ச்சொற்பொருளே எக்காலத்தும் வழங்குவதில்லை. வேர்ச்சொற் பொருளினும் முற்றிலும் மாறு

பட்ட பொருள்களையும் சொற்கள் பெறுவதுண்டு. எனவே சொற்களின் நடைமுறைப் பொருளையுணர்ந்து அவற்றைப் பேச்சிலும், எழுத்திலும் வழங்கவேண்டும். அதற்கு வேர்ச் சொல்லகராதி துணைசெய்வதில்லை.

வேர்ச்சொல்லகராதிகளைப் புரட்டிப் பார்க்கும்போது, ஒவ்வொரு சொல்லும் எதிர்பார்க்க முடியாத அளவு பொருள் மாறுபாடுகளைக் காலந்தோறும், இடந்தோறும் பெற்றுவந்துள்ள உண்மையை அறியலாம். பழங்காலத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் என்னென்ன பொருள்கள் இருந்தன என்று அறியலாம். பெரும்பாலும் அவை சொற்களின் இக்கால நடைமுறைப் பொருள் என்னவெனக் கூறுவதில்லை; அஃதறிதற்குப் பிற அகராதிகளை நாடவேண்டும்.

தொல்காப்பிய 'உரியியல்' தொல்காப்பியர் காலத்து மக்கள் கொண்டிருந்த பொருள்களை எடுத்துக் கூறும் சொல்லியலேயாகும். அது வேர்ச் சொல்லியலுக்குப் பெரிதும் பயன்படும் பகுதியேயொழிய அதுவே வேர்ச்சொல்லியலாகாது. உரிச்சொல் பொருட்குறையில்லாதது; வேர்ச்சொல் பொருட்குறையுடையது. எனவே உரியியலிற் காட்டப்பட்ட உரிச்சொற்களும், பிற உரிச் சொற்களும் வேர்ச்சொற்களாகா எனக் கொள்க.

---

## என்னே உலகம்!

[திரு. த. சிங்காரவேலன்]

என்னே உலகம்! என்னே உலகம்!
அந்நாள் முதலாய் இந்நாள் வரையில்
நாடுகள் தோறும் ஏடுகள் மூலம்
நல்லறம் பலவும் பல்கிய போதினும்
நடைமுறை வாழ்வில் நல்லவை நீக்கி
அல்லவை செய்வோர் அளவிலர் ஆயினர்
அன்னவர் வாழ்வில் அழகு மிளிர்வதும்
நல்லவர் நாளும் நலிவதும் கண்டோம்
வியத்தகு இந்நிலை கண்டே போலும்
"இருவே றுலகின் இயற்கை" என் றந்நாள்
இயம்பினர் வள்ளுவப் பெருந்தகை எடுத்தே!

## திருமுறை அருச்சனை

# அமைச்சர் பக்தவத்சலனர் அறிவிப்பு

21—8—1961 திங்கட்கிழமை காலை 10-30 மணிக்குத் திருவண்ணமலை யாதீனம் குன்றக்குடி அருட்டிரு தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருத்தலைமையில் தமிழ் மாநிலத்தின் 'அறநிலையப் பாதுகாப்புத்துறை உட்டுறைகளின்' அமைச்சர் உயர்திரு. எம். பக்தவச்சலம் அவர்கள் வளமனைக்கு அவர்கள் அறிவித்துள்ளபடி ஏறத்தாழ முப்பது பேர்களுக்கு மேற்பட்ட திருக்கூட்டத்தார் தூதாகத் திருமுறையருச்சனையின் சிறப்பும் இன்றியமையாமையும் விளக்குதற்குச் சென்றனர். அக்குழுவினருள் சிலர் பெயர்கள் வருமாறு :

க. குன்றக்குடி அடிகளார். உ. கோவை. தவத்திரு இராமசாமி அடிகள். ங. திருக்குறள் அழகரடிகள், ச. சிவத்திரு. சு. ஏகாம்பரக்குருக்கள். ரு. தவத்திரு. அருணந்தி சிவாச்சாரியார், திருவாளர்கள். சு. சிவநேசன். எ. கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளை. அ. கழகப் புலவர். ப. இராமநாத பிள்ளை. கூ. க. வச்சிரவேலு முதலியார். க0 சி. அருணை வடிவேல் முதலியார். கக. ஆர். செயதேவன் செட்டியார். கஉ. ஆறு. அரி. சு. ஆறுமுகசாமி நாடார். கங. பேராசிரியர் மயிலை. சிவமுத்து. கச. புலவர் ந. ரா. முருகவேள், கரு. கோவைகிழார் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், கசு. டி. ஏ. வி. நாதன். கஎ. இராமாமிர்தத்தொண்டைமான் எம். எல். ஏ. கஅ. இராமகிருட்டிணத் தேவர் எம். எல். ஏ.

அமைச்சரவர்கள் குழுவினரை இன்முகத்தோடு நன்மொழி புகன்று நல்வரவேற்றனர். இவ்வருங்காட்சி (பேட்டி)யின் போது இந்து அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்களும் உடனிருந்தனர். குழுவினர் திருமுறைகள் சித்தாந்த நூல்கள், ஆகமங்கள் அடங்கிய பெரும்பேழையொன்றும் உடன்கொண்டு வந்திருந்தனர்.

அமைச்சரவர்கள் திருமுறைகள், திருவாய்மொழிகள் ஆகிய தெய்வத்திருவருட் பனுவல்களில் உங்களைவிட எனக்கு அளவிறந்த பற்றுண்டு. அவற்றை நான் ஓதி வருகின்றேன். 'தமிழில் அருச்சனை' என்னும் சொல் தெளிவற்றது. திருமுறைகள் அல்லாதவற்றிலிருந்தும் அருச்சனை செய்தல் வேண்டும் என ஒருவர் சொல்லுதற்கும் இடமேற்படலாம். அது

கூடாதென்பதே என் கருத்து. அதனால் 'திருமுறை அருச்சனை' யென்றே இருத்தல் வேண்டுமென இசைத்தனர். குன்றக்குடி யடிகளாரும் அதனை ஒப்புக்கொண்டு தங்கருத்தும் அதுவே எனவும், தம் அறிக்கையிலும் அக்குறிப்புத்தோன்றத்திருப்பதிக அருச்சனையென்றே குறிக்கப்பட்டிருப்பதையுங்காட்டி மன மகிழ்வொடு மொழிந்தனர். வெளிப்படையில் தமிழிலருச்சனை யென்று சொல்லி வந்ததும் இக்கருத்தேதான், என்றனர்.

கழக ஆட்சியாளர், எங்கழகப் புலவர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் என்றுமே திருமுறையருச்சனை எனக் கூறியும் எழுதியும் வந்துள்ளனர் என்றனர்.

அமைச்சரவர்கள் 'திருமுறை அருச்சனை'க்கென காலையில் காலை வழிபாடு முடிந்ததும் அரைமணி நேரமும் அதுபோல் மாலையில் மாலை வழிபாடு முடிந்ததும் அரைமணி நேரமும் ஒதுக்கி அந்நேரத்தில் மெய்யன்பர்கள் ஒரிருவர் நால்வர் ஒன்று கூடி ஓதுவாரைக் கொண்டு திருமுறைக்கண்ணுள்ள '**போற்றி**' மந்திரங்களை ஓதச்செய்து குருக்களைக்கொண்டு தளிரோ மலரோ தூவுவித்து அருச்சனை புரிதல் வேண்டும். குறைந்தது ஒருவர் இரண்டணுவிழுக்காடு கொடுத்தல்வேண்டும். அவற்றில் ஓர் அணு ஓதுவார்க்கும் மற்றோர் அணு குருக்களுக்குமாக ஏற்படுத்தல் வேண்டும் என்றனர். எல்லாரும் ஒப்புக்கொண்டனர்.

மேலும் திருவருட் பனுவல்களுக்குள்ள மெய்ம்மைப் பெருமையினைத் தொன்று தொட்டு இன்றுகாறும் நடை முறையிலிருந்து வரும் ஓர் அரிய நிகழ்ச்சியினை எடுத்துக்காட்டியும் மொழிந்தனர். அது வருமாறு: திருப்பதியில் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கடவுட்டிருமுன் 'சுப்பிரபாதம்' என்னும் ஆரிய மந்திரம் ஓதி வருவது வழக்கம். எனினும் மார்கழியில் அதனை அறவே அகற்றித் திருவாய் மொழியில் தொண்டரடிப் பொடி ஆழ்வார் பாடியருளிய 'திருப்பள்ளியெழுச்சி' என்னும் தமிழ்மறை முப்பது நாளும் ஓதப்பட்டு வருகின்றது என்பதே.

பின் எல்லாரையும் ஒருங்கமர்த்தி அமைச்சர் வளமனையில் நிழலுருவம் எடுக்கப்பட்டது. அனைவரும் அமைச்சர்பால் விடைபெற்று மீண்டனர்.

நால்வர் தமிழ்மறையால் நாட்டில் நிலைநிற்கும்
ஆலமர் செல்வன் அருள்நகரில் - நால்வரருள்
போற்றிமறை யோதித் **திருமுறை யர்ச்சனை**
போற்றுவதே சைவர்கடன் போற்று.

# திருமுறையருச்சனை

முத்தும் முத்தமிழும் எத்திசையும் புகழ என்றும் நின்று நிலவும் திருப்பதி கூடலாலவாயாகும். இத்திருப்பதியினைத் தலைநகராகக்கொண்டு விளங்கும் நாடு பாண்டி நாடாகும். 'பாண்டி நாடே பழம் பதியாகவும்' எனவும், 'அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த' எனவும் ஆளுடைய அடிகளால் சிறந்தெடுந்தோதப்பட்ட நாடு பாண்டி நாடாகும். இஞ்ஞான்று நின்று நிலவுந்திருக்கோவில்கள் சமய குரவர் நால்வர் திருமுறைகளின் சீர்சிறப்புக்களினுளைகும். அத்திருமுறைகளின்வழி வழிபாடியற்றுவதே செய்ந்நன்றிமறவாச் செம்மைச் செயலாகும்.

அம்முறையில் **தவத்திரு குன்றக்குடியடிகளார்தம்** அரும் பெருமுயற்சியால் 4—10—1961 இல் மதுரை அங்கயற்கண்ணம்மை, சொக்கலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலின்கண் 'அறநிலையப்பாதுகாப்பு உட்டுறை'களின் அமைச்சராகத் திகழும் **திரு. எம். பக்தவத்சலம் அவர்களால் திருமுறையருச்சனை** தொடங்குவிக்கப்பட்டது. இம்மாபெரும் சிறப்பு விழாவினுக்குத் **தமிழவேள் திரு. பி. டி. இராசன், எம். எல். சி., அவர்கள்** தலைமை தாங்கினார்கள். திருமுறையருச்சனை செய்யவுங் காணவும் எப்புலத்தினின்றும் வந்து குழுமிய ஒப்பிலா மெய்யன்பர்கள் அளவிறந்தவராவர். குன்றக்குடியடிகளாரைத் தலைவராகக் கொண்டு தமிழக முற்றும் நிகழ்ந்து வரும் 'மாவட்ட அருணெறித் திருக்கூட்ட' வகையாளர் அளவிறந்தார் வந்துள்ளனர்.

திருக்கலியாண மண்டபத்தில் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கட்குப்பாராட்டிதழ்கள் பல படித்தளிக்கப்பட்டன. இவ்விதழ்கள் ஆங்காங்கிருந்து வந்து குழுமிய பல மாவட்ட அருணெறித் திருக்கூட்டத்தாரால் அன்புகனிந்து யாத்துக் கொண்டு வரப்பட்டனவாகும். குன்றக்குடியடிகளாரும் நன்றிபுரி நல்லுரை பல நவின்றனர். அமைச்சர் இணக்கத்தின்மேல் திருமுறைகளினின்றும் திருமுறையருச்சனைக்கு எனத் தொகுத்த '**திருமுறைக் கொத்து**' என்னும் நூலை அடிகளார் வெளியிட்டனர். அத்துடன் அடிகளார் திருக்கோவிற் றிருப்பணிக்கென வெண்பொன் ஆயிரத்தொன்று வழங்கினர். இனிமேல் எல்லாத் திருக்கோவில்களிலும் திருமுறையருச்சனைகள் சிறப்புற நிகழ்ந்து செந்நெறி தழைத்துப் பெருகுமென்பதுறுதி. அமைச்சரவர்களையும், தமிழவேளவர்களையும், அடிகளாரையும், கோவிலாரையும், திருக்கூட்ட மெய்யன்பர்களையும் நனிமிகப் பாராட்டுகின்றோம்.

வாழ்க திருமுறைகள்! வளர்க செந்நெறி!

---

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா

கடந்த 15-9-61 இல் திருநெல்வேலி ம. தி. தா. இந்துக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில், தமிழ் நாட்டுக் கல்வி, நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழா நடைபெற்றது. அது காலை தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் திரு. அ. சீனிவாசராகவன் அவர்களால், வெள்ளி விழா மலராக 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்' முதற் பகுதி வெளியிடப் பெற்றது. பல தமிழறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். சங்க அமைச்சர் திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சங்கத்தின் தமிழ்ப்பணிகள்பற்றிப் பேசினார். விழா இனிது முடிவுற்றது.

**குறிப்பு :** சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பணிகள் அளப்பில. மேலும் அத்தகு பணியாற்றிச் சங்கம் மென்மேலும் வளர்வதாக.

## (உ) திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணி

திருமயிலை திருவள்ளுவர் தெருவிலுள்ள திருவள்ளுவர் திருக்கோயிலின் திருப்பணியை 14-9-61இல் தமிழக அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர் உயர்திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. எ., பி. எல். அவர்கள் துவக்க வழிபாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். 16-9-61இல் அறநிலைய அமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் திருப்பணியைத் துவக்கி வைத்தார்கள்.

**குறிப்பு :** வள்ளுவப் பெருந்தகையை மக்கள் உள்ளத்தில் நிலை நிறுத்தவும், அவர்நெறி நாடெங்கும் பரவவும் இத்தகைய திருப்பணி மிக மிக இன்றியமையாததாகும்.

## (ங) முத்தமிழ் மாநாடு

கடந்த 15-9-61ல் சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பில் முத்தமிழ் மாநாடு நடைபெற்றது. குன்றக்குடி அடிகளார் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், பாரதிதாசன், தேவநேயப் பாவாணர், பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், ப. ஜீவாநந்தம் ஆகியோர் பேசினர். ஆலயவழிபாடு தமிழில் நடைபெறவேண்டும் என்பதைக் குன்றக்குடி அடிகளார் வலியுறுத்தியும், தேவநாகரி எழுத்து பிற மொழிகள் மீது திணிக்கப்படுவது தவறு என்றும், எல்லாத் தேசீய மொழிகளையும் இந்திய அரசு ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், இந்தியாவின் தேசியப் பொது நூலாகத் திருக்குறளை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், தமிழில் அறிவியல் நூல்கள் ஆக்கப்பட வேண்டுமெனவும் பேசினார். மற்றத் தமிழ்ப் பேரறிஞர்களும், தமிழின் சிறப்பையும், இந்தி ஆதிக்கத்தைக் கண்டித்தும் பேசினர்.

**குறிப்பு .** இங்ஙனம் பல கட்சியினரும் கூடி முத்தமிழ் வளர்க்கும் முயற்சி பாராட்டத்தக்கதே. வாழ்க முத்தமிழ் !

(ச) குழந்தைகள் நூல்வெளியீட்டு விழா

கடந்த 12-9-61இல் சென்னை செயின்ட்மேரி மண்டபத்தில் பாரி நிலயத்தின் சார்பில் இவ்விழா நடைபெற்றது. உள்துறை அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். கல்வி, நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள், திரு அழ. வள்ளியப்பா அவர்கள் எழுதியுள்ள 'மலரும் உள்ளம்' (குழந்தைப் பாடல்கள்) இரண்டாம் தொகுதியை வெளியிட்டார். அதுகாலை, தமிழில் நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமென்றும், அதிலும் குழந்தைகளுக்கான நூல்கள் வெளிவர வேண்டுவது மிக இன்றியமையாததென்றும் இதில் அரசினர் மிக்க அக்கறை கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார். பேராசிரியர் மயிலை சிவமுத்து, திருமதி சௌந்திரம் கைலாசம், அகிலன், ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

குறிப்பு : அமைச்சரவர்கள் கூறியுள்ளபடி குழந்தைகளுக்கான நூல்கள் வெளிவர அரசியலார் ஆசிரியர்கட்கும், நூல்வெளியீட்டாளர்கட்கும் மேலும் பலவழிகளில் ஆதரவு தருவார்களென நம்புகிறோம்.

(ரு) தமிழ்க் கலைக் களஞ்சிய எட்டாந் தொகுதி வெளியீட்டுவிழா

"உலகிலேயே தொன்மையான மொழி தமிழ். அது இலக்கியச் சிறப்புக்கள் அனைத்தும் ஒருங்கே பெற்ற மொழி. அதன் இலக்கியச் செறிவை இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் மக்களும் தெரிந்து கொள்ளும் வகைசெய்யும் முறையில் தமிழ் இலக்கியங்களை வட்டார மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டும்" என்று, 16-9-61இல் தமிழ்க் கலைக் களஞ்சிய 8ஆம் தொகுதியை வெளியிட்டுப் பேசிய தமிழக ஆளுநர் உயர்திரு. விட்ணுராம் மேதி குறிப்பிட்டார். விழாத் தலைவர் திரு. அவினாசிலிங்கம் செட்டியார் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பணிகளை விளக்கியும், கலைக் களஞ்சியத் தொகுப்பு வேலை முடிவடைந்த பின்னரும் இதுபோன்ற பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டியுள்ளனவென்றும் கூறினார்.

தமிழில் சிறந்த நூல்கள் எழுதியுள்ள ஆசிரியர்களான திரு. மீ. ப. சோமசுந்தரம், பி. எஸ். இராமையா, அ. மு. பரம சிவானந்தம், வி. டி. சுப்பையா முதலியார், டாக்டர் மு. ஆரோக்கிய சாமி ஆகியோருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசளித்தது. இவர்கள் முறையே சிறுகதை, நாடகம், கட்டுரை, வரலாறு, விவசாயம் ஆகிய துறைகளில் நூல் எழுதியவர்களாவர்.

குறிப்பு : தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அரிய பணிகளைப் பாராட்டுகிறோம். பரிசு பெற்ற நூலாசிரியர்கட்கும் எமது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(சா) 'சர்வதேசச் சட்டம்' வெளியீட்டு விழா

"எல்லாத் துறைகளிலும் தமிழில் புதிய நூல்களை இயற்றுவதற்கு இனி நிதி தடையாக இருக்காது. நிதி உதவி தாராளமாகக் கிடைக்கும்" என்று தமிழகக் கல்வி, நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் 5-8-61இல் மயிலாப்பூர் உட்லண்ட்சு விடுதியில் நடைபெற்ற 'சர்வதேசச் சட்டம்' என்னும் நூல்வெளியீட்டு விழாவில் அந்நூலை வெளியிட்டுப் பேசியகாலை குறிப்பிட்டார்.

விழாவிற்கு உயர் நீதிமன்ற நடுவர் திரு. எஸ். கணபதியா பிள்ளையவர்கள் தலைமை தாங்கினார்கள். சென்னை சட்டக் கல்லூரிப் பேராசிரியர் திரு. அ. பழனிச்சாமி அவர்கள் எழுதிய இந்நூலை, பழநியப்பா பிரதர்ஸ் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இது தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுபெற்ற நூலாகும்.

**குறிப்பு**.—'சர்வதேச சட்டம்' என்னும் நூலை ஆக்கித் தமிழகத்திற்குத் தந்த நூலாசிரியர் அவர்களையும் பதிப்பகத்தாரையும் பாராட்டுகிறோம். அத்துடன் இத்தகைய புதுநூல்களுக்கு ஆக்கமளிக்கு முறையிலே நிதியமைச்சர் அவர்கள் பேசியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். அமைச்சரவர்களின் தாய்மொழிப் பற்றினைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

## (எ) மறை திருநாவுக்கரசு அவர்கட்குப் பாராட்டு

'மறைமலை அடிகள் வரலாறு' என்னும் அரிய பெரிய வரலாற்று நூலை உருவாக்கித் தமிழகத்திற்குத் தந்த, தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரித் தமிழ் விரிவுரையாளரும் மறைமலையடிகளாரின் திருமகனாருமான மறை திருநாவுக்கரசு அவர்கட்குச் சென்னை அரசினர் ரூபா. இரண்டாயிரம் கொடையாக வழங்கியுள்ளதைப் பாராட்ட ஷை கல்லூரி ஆசிரியர்கள், முதல்வர் திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள் தலைமையில் 17-8-61இல் ஒரு தேநீர் விருந்து நடத்தினர். நூலாசிரியரைப் பாராட்டிப் பேராசிரியர்கள் கே. ஆர். சந்திரசேகரன், கு. ந. சிவராமகிருட்டிணன், டி. எஸ். இராசகோபாலன், அ. செகதீசன், ஏ. ஆர். பொன்னையா ஆகியோர் பேசினர். செயலாளர் திரு. பு. இராச துரை அனைவரையும் வரவேற்றுப் பேசினர். நூலாசிரியருக்கும் இரண்டாயிரம் கொடை வழங்கிய சென்னை அரசினரைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மறை திருநாவுக்கரசு அவர்கள் தமக்களித்த பாராட்டுரைகட்கும், அரசினர்க்கும் நன்றி தெரிவித்துப் பதிலளித்தார்.

**குறிப்பு**: மறை திருநாவுக்கரசு அவர்களையும், அவர்தம் பணியினைப் போற்றிக் கொடை வழங்கிய அரசினரையும் பாராட்டுகிறோம்.

## (அ) தேவநேயப் பாவாணர் அவர்கட்குப் பொன்னாடை போர்த்து விழா

27—8—61 அன்று எரல் திருக்குறள் மன்றத்தின் சார்பில் உயர்திரு பண்டித, புலவ, வித்துவான் தேவநேயப் பாவாணர் அவர்கட்குப் பொன்னாடை போர்த்துவிழா திரு. முத்துவைகுந்த நாடார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்ப் பேறிஞர் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

பாவாணர் அவர்களுக்கு எமது உளமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துககொள்ளுகின்றோம். அவர்கள் நீடினிது வாழ்ந்து தமிழ்ப் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.